

# தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான

## மொஹான் பண்டிதகே அவர்களின் சிந்தனைக் குறிப்புகள்

ஹேலீஸ் குழுமத்தின் கடந்த 147 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பரிணாமவளர்ச்சியானது, நாட்டின் பயணப் பாதையுடன் பின்னிப்பிணைந்துள்ளதுடன், இலங்கையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணி வளர்ப்பதற்கும், அதன் உள்ளாந்த ஆற்றலைப் பயன்படுத்துவதற்கும் நாம் கூர்ந்து கவனித்து பங்களிப்பதில் கௌரவம் பெற்றவர்களாக விளங்குகின்றோம்.

அன்பார்ந்த பங்குதாரர்களே,

கடந்த ஆண்டுக்கான எமது பெறுமதிமிக்க பங்குதாரர்களுக்கான எனது செய்தியில், இலங்கையின் எதிர்காலம், ஹேலீஸ் குழுமம், நாம் தொழிற்படுகின்ற பொருளாதார சூழல் பற்றி எனது சாதகமான எண்ணப்பாங்கினையும், நம்பிக்கையினையும் பகிர்ந்து கொண்டேன். 2022/23 இன் எதிர்பாராத பொருளாதார பாதிக்கப்படும் தன்மைகளில் இருந்து படிப்படியாக ஆனால், நிச்சயமாக எழுந்து நிற்கின்ற நாடு என்ற வகையில், எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பது பற்றி மேலும் நம்பிக்கையுடன் நான் இன்று காணப்படுகின்றேன். குழுமத்தின் பெறுமதி உருவாக்கத்தை நிலைநிறுத்துவதற்கான அவர்களின் பண்புசார் மனஉறுதி மற்றும் நன்றியுணர்வு என்பன மீது நம்பிக்கை வைத்து, மாறுதலடைகின்ற மற்றும் தளம்பல்மிக்க இக்காலப்பகுதியில், எமது அணியானது, குறிப்பிடத்தக்க விதத்தில் எவ்வாறு இடையறாது முயற்சித்தது என்பது பற்றிய கள அனுபவத்தை நான் பெற்றுள்ளேன். இப்பின்னணிக்கு எதிராக, 2024 மார்ச் 31 ஆம் ஆண்டு முடிவுற்ற நிதியாண்டுக்கான ஹேலீஸ் பீஎல்சியின் 11 ஆவது ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையினையும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களையும் உங்களிடம் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நிச்சயமற்ற தன்மையின் தோற்றம் பற்றிய ஏதேனும் எண்ணப்பாங்கினை விஞ்சுகின்ற மாற்றமானது, பொருள்மயக்கமாகவும், மாறநிலையாகவும் இருந்து வருகின்ற உலகளாவிய உண்மையுடன் ஹேலீஸ் குழுமமானது ரூ.436.83 பில்லியன் திரட்டிய வருமானத்தினையும், ரூ. 25.34 பில்லியன் வரிக்கு முந்திய இலாபத்தினையும் ஈட்டுவதற்கு நம்பகமாக செயலாற்றியுள்ளது. முன்னைய ஆண்டின் பதிவாகிய உயர்வுகளிலிருந்து இத்தொகைகள் இயல்புநிலையடைகின்ற அதேவேளை, மாறுதலடைகின்ற வளர்ச்சிக்காக குழுமத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலிமைப்படுத்தி, அதனை நிலைநிறுத்தியுள்ள குழுமத்தின் ஏதுவாகின்ற சாதனைகளை உண்மையாகப் பாராட்டுவதற்கு நிதியியல் கூற்றுக்களைத் தாண்டி நோக்குவது இவ்வாண்டில் முக்கியமானதென நான் நம்புகின்றேன். குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய வாய்ப்புடன் நாம் புதிய சந்தைகளுக்குள் நுழைந்து, ஸ்திரம்மிக்கத்தக்க புத்தாக்கங்களைத் தொடங்கி, சுற்றாடல் மற்றும் சமூகக் கரிசனைகளை எமது செயன்முறைகளுக்குள் உபாயரீதியாக உட்புகுத்தி, எமது மக்களுக்காகவும், அதேபோன்று, தொழிற்துறைப் பெறுமதிச் சங்கிலிகள் முழுவதும் இயலளவுகளை விருத்திசெய்வதில் நாம் தொடர்ந்தும் முதலீடு செய்து வந்துள்ளோம்.

இலங்கையின் நிறுவனசார் உத்வேகமாக, குழுமம் அதன் தொழிற்பாடுகளின் பல்வேறு நோக்குகள் முழுவதும் உன்னதத்திற்காக தொடர்ந்தும் அங்கீகரிக்கப்பட்டது. TAGS 2023 நிகழ்வில் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டுக்காகவும், நிறுவன அறிக்கையிடலில் ஒட்டுமொத்த உன்னதம் விருதை வெற்றிபெற்று இலங்கையின் நிறுவன அறிக்கையிடல் அரங்கில் முன்னணியாளராக ஹேலிஸ் அதன் நிலையினை உறுதிப்படுத்திய அதேவேளை, குழுமத்திற்கிடையில் மேலும் 17 விருதுகளைப் பெற்றுக்கொண்டது. ACCA நிலைபெறுதன்மை அறிக்கையிடல் விருதுகள் 2023 நிகழ்வில் ஒட்டுமொத்த வெற்றியாளராகவும் ஹேலீஸ் தரப்படுத்தப்பட்டது. ஏற்றுமதிகளுக்கான அதன் பங்களிப்புகளுக்காகவும் 25 ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில் ஹேலீஸ் அங்கீகரிக்கப்பட்டது. இதில் வேறுபட்ட தொழிற்துறைகளுக்கிடையில் குழுமம் ஒப்பற்ற 17 விருதுகளைத் தனதாக்கிக் கொண்டது.

அதேவேளை, இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த நிறுவன பிரசைகள் நிலைபெறுதன்மை விருதுகள் 2023 இல் எமது பெருந்தோட்டத் துணை நிறுவனமான தலவாக்கல்லே ரீ எஸ்டேட் பீஎல்சி வெற்றியாளராகத் தோற்றம்பெற்று, இச்சாதனையினை பெருந்தோட்டத்துறை துணை நிறுவனம் ஒன்று பெற்றுக்கொண்ட வரலாற்றிலேயே முதல் தடவையினைப் பதிவுசெய்தது.

### எமது பெறுமதி உலகம்

ஹேலீஸ் குழுமத்தின் கடந்த 147 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பரிணாமவளர்ச்சியானது, நாட்டின் பயணப் பாதையுடன் பின்னிப்பிணைந்துள்ளதுடன், இலங்கையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பேணி வளர்ப்பதற்கும், அதன் உள்ளாந்த ஆற்றலைப் பயன்படுத்துவதற்கும் நாம் கூர்ந்து கவனித்து பங்களிப்பதில் கௌரவம் பெற்றவர்களாக விளங்குகின்றோம்.

பெறுமதிச் சங்கிலிகள், வாடிக்கையாளர் வலையமைப்புகள் மற்றும் சமூகங்கள் என்பவற்றுக்கிடையில் ஆழமாக வேரூன்றிய உறவுகளுடன் இலங்கையின் சமூக - பொருளாதார ரீதியாக மிகவும் தாக்கம்மிகு நிறுவனங்களில் ஒன்றாக நாம் திகழ்வது பற்றிப் பெருமையடைகின்றோம். உள்ளூர் விவசாயிகளையும், வெளிப் பயிர்ச்செய்கையாளர்களையும், சர்வதேச வர்த்தக நாமங்களைக் கொண்ட உலகளாவிய பெறுமதிச் சங்கிலிகளுக்குள் ஒருங்கிணைத்து, உலகின் முன்னணி சில்லறை விற்பனையாளர்களின் இறாக்கைகளுக்கு இலங்கையின் தயாரிப்புக்கள் சென்றடைவதை நாம் இயலச்செய்கின்றோம். விசேடத்துவம் மிக்க கையுறைகள் மற்றும் முன்னேற்றகரமான தூய்மைப்படுத்தல் தீர்வுகள் போன்றன தொடக்கம் பெறுமதிசேர்க்கப்பட்ட வேளாண்மை உற்பத்திகள் மற்றும் வாடிக்கையாளர் நீடித்துழைக்கும் பொருட்கள் வரை பல்வகையான எமது விரிவான உற்பத்திப் பிரிவுகள் சமூகங்களுக்கிடையில் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, தொழிற்துறை வளர்ச்சியினை வசதிப்படுத்துகின்றன, எமது சொந்தத் தொழிற்பாடுகளிலும் அதேபோன்று பெறுமதிச் சங்கிலிகளுக்கிடையிலும் சுற்றாடல் ரீதியான தலையீடுகள் பசுமைப் பொருளாதாரத்திற்கு மாறுதலடைவதைத் துரிதப்படுத்துவதுடன், எமது உபாய ரீதியான சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை முயற்சிகள் நாடு முழுவதும் பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் ரீதியான ஆக்கபூர்வமான மாற்றத்தினை இயக்குகின்றன. நோக்கம் எதிர் இலாபம் என்பது பற்றிய சமூக விவாதம் அபரிமிதமாகக் காணப்படுகின்ற வேளையில், இவையிரண்டும் எவ்வாறு ஒன்றிணைந்துள்ளன என்பதனை ஹேலீஸ் எடுத்துக்காட்டியது. எமது சூழல் அமைப்பு முழுவதும் பெறுமதியினை உட்செலுத்துகின்ற அதேவேளை, நாம் யாரென்பதை உண்மையாக வரைவிலக்கணப்படுத்தி, இலங்கையின் வளர்ச்சிப் பயணப் பாதையின் முக்கிய பாகம் ஒன்றாக எம்மை இடம்பெறச்செய்கின்ற, சாதகமான மாற்றத்தினை ஏற்படுத்துகின்ற வியாபார நிறுவனம் ஒன்றாக இயக்குவது இவ்வாற்றலேயாகும்.

### மீளமைத்தல், மீட்சியடைதல், தாக்குப்பிடிக்கும் தன்மை

2023 ஆம் ஆண்டானது, உலகளாவிய அளவில் முக்கிய கோவிட்- தொடர்புபட்ட இடையூறுகளைக் கொண்ட தொடர்ச்சியான ஆண்டுகளின் பின்னர் ஒப்பீட்டளவில் உறுதிப்பாட்டிற்குத் திரும்புவதைக் குறித்த அதேவேளை, வியாபாரங்கள், படிப்படியாகச் செல்கின்ற மற்றும் இணையப்பட்ட நெருக்கடிகளில் தாமாக அடையாளப்படுத்தி, விடாப்பிடியான தளம்பல் மற்றும் சிக்கலான நிலைமைகளை விளைவித்தது. பல்வேறு பிராந்தியங்களிலும் முரண்பாட்டைத் தூண்டுவதற்கான புவிசார் அரசியல் பதற்றங்கள் உயர்வடைந்தமை, வழங்கல் சங்கிலிகளின் இடையீடுகளுக்கு வழிவகுத்து, பணவீக்கத்தில் திடீர் அதிகரிப்பினைத் தூண்டியதுடன், முக்கிய சந்தைகளுக்கிடையில் நாணயக் கொள்கை இறுக்கமாக்கலை எடுத்தியங்கச் செய்தன. மேலும், முக்கிய பொருளாதாரங்கள் வியக்கத்தக்க தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டி 2023 இல் உலகளாவிய பொருளாதாரத்தில் மதிப்பிடப்பட்ட 3.1% வளர்ச்சியை நோக்கிப் பங்களித்தது.

# தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமானவரின் சிந்தனைக் குறிப்புகள்

பொருளாதாரமானது தொடக்கமாயினும் 2023 இல் உறுதிப்பாடு பற்றிய நிலையாக இலங்கை மீட்சிப்பாதையொன்றில் காணப்பட்டது என்பது சமிக்ஞைப்படுத்தியது. செலவு பிரதிபலிப்பு உபயோக சேவை, விலையிடல் மற்றும் அரசிறைத் திரட்டல் வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கியிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டமைப்பு சார்ந்த மற்றும் கொள்கை மறுசீரமைப்புக்கள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்துள்ளன. 2023 செப்டம்பரில், உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்தமை அதிகரித்த நம்பிக்கைக்கு வழிவகுத்தது. அதனைத் தொடர்ந்து, 2023 நவம்பரில் உத்தியோகபூர்வ கடன் கொடுநர்களுடன் படுகடன் மறுசீரமைப்புக்கான கொள்கையளவிலான உடன்படிக்கை எட்டப்பட்டதுடன், வர்த்தக ரீதியான கடன் கொடுநர்களுடன் தற்போது பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வொருங்கிணைக்கப்பட்ட தலையீடுகளின் விளைவாக, 2022 இன் அனுபவித்த 7.3% கொண்ட சடுதியான பொருளாதார வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2023 இல் இலங்கைப் பொருளாதார ரூ.2.3% சுருக்கத்தைக் காண்பித்தது. தொடர்ச்சியாக ஆறு காலாண்டுகளைக் கொண்ட சுருக்கத்தின் பின்னர், ஆண்டின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பொன்றினைப் பதிவு செய்தமை மூலம் பொருளாதாரமானது, ஆண்டின் மூன்றாவது காலாண்டில் அதன் வீழச்சியடைகின்ற போக்கிலிருந்து திரும்பலடைந்தது. கேள்வி குறைவடைந்து காணப்பட்டு, குறைவான செலவிடத்தக்க வருமானத்தைப் பிரதிபலித்த அதேவேளை, வெளிநாட்டு மற்றும் அரசிறை நிலுவைகள் மேம்பட்டன, சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணம் அனுப்பும் நடவடிக்கைகள் என்பவற்றின் மீட்சி மூலம் துணையளிக்கப்பட்டு, வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை அழுத்தங்கள் தளர்வடைந்து 2023 இன் இறுதியளவில் சுமார் இறக்குமதிகளின் 8 - 9 வாரங்களுக்கான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் மேம்படுவதற்கு வழிவகுத்தன. மேம்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள், ஐக்கிய அமெரிக்க டொலருக்கு ரூபா 301.81 ஆக ஆண்டு முடிவிற்கு நிதியாண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா 8% ஆல் அதிகரித்து உள்நாட்டு நாணயம் உயர்வடைவதற்கு வழிவகுத்தது.

2022 இல் விலைகள் உச்சத்தைத் தொட்டதைத் தொடர்ந்து, 2023 இல் பணவீக்கம் வீழ்ச்சியடைந்தது, மேம்பட்ட வழங்கள் நிலைமைகள், ரூபாவின் பெறுமதியேற்றம் மற்றும் நாணய நிதியிடல் தளர்வடைதல் என்பவற்றைப் பிரதிபலித்தது. இதன்விளைவாக, கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்க மட்டங்கள் நிதியாண்டின் தொடக்கத்தில் 35.30% இல் இருந்து 2024 மார்ச் மாதத்தில் 0.90% ஆக வீழ்ச்சியடைந்தது, பணவீக்கம் மிதமடைந்தமையினால், இலங்கை மத்திய வங்கி தளர்த்தல் நாணயக் கொள்கை நிலையினைப் பின்பற்றியது, கொள்கை வீதங்களில் குறைவு, துணைநில் வைப்பு வசதி வீதத்திலும், துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்திலும் முறையே 9% மற்றும் 10% ஆக வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. உள்நாட்டுப் படுகடன் சீரமைப்பு பற்றிய சிறந்த தெளிவுடன் ஒன்றிணைந்த நாணயத் தளர்த்தல் சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி நகர்வதற்கு வழிவகுத்தன. அதற்கமைய, சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் ஒரு ஆண்டின் முன் 21.40% இல் இருந்து 10.69% க்குக் குறைவடைந்தது.

நாட்டின் பேரண்டப் பொருளாதார அடிப்படைகள் நிலைபெறுதலானது, பெருமளவில் தொழில்வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமாக இருந்த அதேவேளை, ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட வியாபாரம் ஒன்றாக குழுமம், அநேகமான உள்ளீட்டுச் செலவுகள் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றுக்கு சுமார் ரூபா 350 - 360 ஆக் தீர்ப்பனவு செய்யப்பட்டமையினால் ஆண்டின் போது இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. அதாவது, குறிப்பான துறை மீதான பாதகமான விளைவுகள் வேறுபட்ட துறை ஒன்றின் மீதான தாக்கங்களை எதிர்த்துச் செல்வதன் மூலம், பொதுவாக முறியடிக்கப்படுகின்றமையினால், வெளிநாட்டுத் தாக்கங்களைத் தணிப்பதற்கு பாரியளவில் ஹேலீஸ் தொடர்ந்தும் அதன் பன்முகத்தன்மையில் இருந்து அனுகூலமடைந்தது.

## செயலாற்றுகை பற்றிய பொது நோக்கு

அதன் வியாபாரங்களை மறுசீரமைத்தல் மற்றும் உகப்பாக்குதல் என்பன ஊடாக தாக்குப்பிடிக்கும் தன்மையினைக் கட்டியெழுப்புவதற்கு அண்மைய ஆண்டுகளில் உபாய ரீதியான தலையீடுகள், ஆண்டின் சவால்களை குழுமம் விரைவாக திசைப்படுத்துவதற்கு இயலச் செய்தது. ஆண்டு காலப்பகுதியில் உபாய ரீதியான மையப்படுத்தலின் முக்கிய துறைகளாக குழுமத்தின் புவியியல் ரீதியான சுவடுகளை பன்முகப்படுத்தல் மற்றும் வாடிக்கையாளர் வகுப்பினரைப் பன்முகப்படுத்திய அதேவேளை, வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கங்கள் மற்றும் சேவை உன்னதம் என்பவற்றை அயராது நாடிச் சென்றமை என்பன உள்ளடங்கியிருந்தன. 2023 மார்ச் மாதத்தில் ஹொரண பிளான்டேசன்ஸ் பீஎல்சி நிறுவனம், குழுமத்தினால் கையப்படுத்தப்பட்டதன் பின்னர், மீளாய்வு செய்யப்படுகின்ற காலப்பகுதியின் திரட்டிய நிதியியல் கூற்றுக்களில் அது உள்ளடக்கப்பட்டுள்ளது.

தளம்பல்மிக்க செலாவனி வீத இயக்கவாற்றலுக்கு மத்தியில் குழுமமானது, ஆண்டுக்காண்டு இலாப வீழ்ச்சியினை 10% ஆகக் கட்டுப்படுத்தி, ஆண்டின் போது ரூபா 436.83 பில்லியன் கொண்ட திரட்டிய வருவாயினை வழங்கியது. போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறை 21% கொண்ட பங்குடன் குழும வருவாய்க்கு பாரியளவு பங்களிப்புச் செய்தமையினால், அதன் நிலையினைத் தக்கவைத்துக்கொண்டது. அதனைத் தொடர்ந்து, 19% ஐக் கொண்டிருந்த நுகர்வோர் மற்றும் சில்லறைப் பிரிவு காணப்பட்டது. குழுமத்தின் முக்கிய ஏற்றுமதி நோக்காகக் கொண்ட துறைகள், சாதகமற்ற செலாவனி வீதத்திற்கு மத்தியில் வருவாய் வீழ்ச்சிகளைப் பதிவு செய்த அதேவேளை, கருத்திட்டங்கள் மற்றும் பொறியியல், ஓய்வு, வாடிக்கையாளர் மற்றும் சில்லறை, பெருந்தோட்டங்கள், கைத்தொழில் உள்ளீடுகள், சக்தி மற்றும் எரிசக்தி அத்துடன் விவசாயம் என்பன வருமான வளர்ச்சியைப் பதிவு செய்தன.

வட்டி மற்றும் வரிக்கு முந்திய குழுமத்தின் வருவாய்கள் (நுஊஐவு) ஆண்டின் போது ரூபா 42.72 பில்லியனாக 30% ஆல் வீழ்ச்சியடைந்து, செலவு அதிகரிப்புகள், இலங்கை ரூபாவின் பெறுமதியேற்றம் மற்றும் முக்கிய துறைகளுக்கிடையில் குறைவடைந்த கேள்வி என்பவற்றைப் பிரதிபலித்தன. அதாவது, கருத்திட்டங்கள் மற்றும் பொறியியல் (ஹேலிஸ் பென்டோன்ஸ்) துறையானது, 90% கொண்ட வட்டி மற்றும் வரிக்கு முந்திய இலாபத்தினை வழங்கிய அதேவேளை, புடவைகள் துறையும் 37% கொண்ட வட்டி மற்றும் வரிக்கு முந்திய வருவாய் வளர்ச்சியினை அடைவதற்கு வலிமையான தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டி ஆண்டின் போது தேறிய நிதிச் செலவு ரூபா 17.24 பில்லியனாக 8% மும் கீழ்நோக்கிய போக்கினை வட்டி வீதம் பிரதிபலித்தது.

இலாபத்திற்கான முக்கிய பங்களிப்பாளர்களாக தூய்மைப்படுத்தல், கருத்திட்டங்கள் மற்றும் பொறியியல் மற்றும் கைப் பாதுகாப்புத் துறைகள் என்பன தோற்றம்பெற்றமை மூலம் ரூபா 25.34 பில்லியன் கொண்ட வரிக்கு முந்திய இலாபத்தினை வழங்குவதற்கு சவால்மிக்கதொரு ஆண்டில் குழுமம் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியது. குழுமத்தின் இரண்டாவது உயர்வான இலாபப் பங்களிப்பாளராக, அதன்

நிலைக்கு துறை நகர்ந்ததை எடுத்துக்காட்டுகின்ற சூரிய மின்சக்தியில் வலுவான வளர்ச்சியின் மூலம் முன்னிலை வகித்து, ஆண்டின் போது கருத்திட்டங்கள் மற்றும் பொறியியல் துறை இலாபத்தினை ஏறக்குறைய மும்மடங்காக எய்தியிருந்தது என்பதைக் குறிப்பிடுவது உசிதமாகும்.

### வலிமையும் உறுதிப்பாடும்

ஆண்டின் போது நடைமுறையல்லா மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் முறையே 5% மற்றும் 11% யினால் விரிவடைந்தமையுடன், குழுமத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 446.34 பில்லியனாக 8% ஆல் அதிகரித்தன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களில் விரிவடைதலானது, கைப் பாதுகாப்பு மற்றும் தூய்மைப்படுத்தல் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் தயாரிப்பு இயலளவுக்கான தரமுயர்த்தல்கள், விவசாயத்துறை மூலம் குழாய் தயாரிப்பு வசதியின் உருவாக்கம் மற்றும் தேயிலை ஏற்றுமதித்துறையின் புவியியல் ரீதியான விரிவாக்கம் என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. புதிய புவியியல் அமைவிடங்களில் முதலீடுகளை முன்னெடுத்தல், அதனூடாக அதன் சுவடுகளை மேலும் விரிவுபடுத்தல், வெளிநாட்டுச் செலாவணி ஈட்டல் இயலளவுகளை வலிமைப்படுத்தல் மற்றும் அதன் தொழிற்பாட்டு மாதிரியின் தாக்குப் பிடிக்கும் தன்மையினை மேம்படுத்துதல் ஊடாக அதன் புவியியல் ரீதியான பிரசங்கத்தை அதிகரித்தளவில் பன்முகப்படுத்துவதற்கு குழுமம் நாடிச் சென்றது.

ஆண்டின் போது இலாபமீட்டுதல் மற்றும் பிடித்து வைத்தல் மூலம் துணையளித்து ரூபா 125.53 பில்லியனாக 2% ஆல் 2024 மார்ச் 31 அன்றுள்ளவாறு மொத்தப் பங்குரிமை மூலதனம் அதிகரித்தது. மொத்தக் கடன் பெறுதல் ரூபா 171.88 பில்லியனாக 8% ஆல் அதிகரித்து, முன்னைய ஆண்டில் பங்குரிமை மூலதனத்திற்கான படுகடன் விகிதத்தை 1.30 உடன் ஒப்பிடுகையில் 1.37 ஆக மாற்றியமைத்தது. இவ்வதிகரிப்புகளுக்கு மத்தியில், குழுமத்தின் நிதியியல் தொகுப்பு திடமானதாகக் காணப்பட்டு, அண்மைய ஆண்டுகளில் படுகடன் நிதியளிக்கப்பட்ட கையகப்படுத்தல்களுக்கான முன்மதியுடைய அணுகுமுறையினையும் குழுமத்தின் பாரிய மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரங்களில் இருந்து தோன்றுகின்ற வலுவான காசுப்பாய்ச்சல் உருவாக்க இயலளவுகளையும் ஒப்பீட்டளவில் சிறந்த படுகடன் உள்ளடக்க மட்டங்களையும் பிரதிபலித்தன.

### உள்நாட்டில் வேரூன்றிய உலகளாவிய எண்ணப்பாங்கு

ஆண்டின் போது ஏற்றுமதி ஊடாக ஈட்டப்பட்ட குழுமத்தின் வருவாயின் ஏறத்தாழ 54% உடன் ஹேலிஸ் உலகிற்கு இலங்கையின் சிறந்த படைப்புக்களை வழங்கி, உலகளாவிய அரங்கில் செயல்திறன்வாய்ந்த விதத்தில் போட்டியிடுவதற்கு உள்நாட்டு இயலளவுகள், உற்பத்திகள், தொழில்நுட்பம் மற்றும் ஆற்றல் என்பவற்றிலிருந்து தொடர்ந்தும் ஆக்கபூர்வமான பயனைப் பெறுகின்றது. எடுத்துக்காட்டாக தூய்மைப்படுத்தல் துறையானது, உலகத் தரம்மிக்க மின்தேக்கி உற்பத்திகளையும் கடினமான காபன்களையும் உருவாக்குவதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் அதன் உள்நாட்டு விஞ்ஞானிகளினதும், அதன் தேர்ச்சிகளினதும் இணையற்ற இயலளவுகளில் இருந்து அனுகூலமடைகின்றது, கைப்பாதுகாப்புத் துறையானது, மலை சைக்கிளோட்டம், கோல்ப் விளையாட்டு, பனிச்சறுக்கல் விளையாட்டு மற்றும் ஏனையவற்றுக்கு மத்தியில் தொழிற்பாட்டு உடற்பயிற்சிகள் உள்ளடங்கலாக, பல்வேறு வகையான விளையாட்டு நடவடிக்கைகளின் குறிப்பான தேவைப்பாடுகளுக்குப் பொருந்தும் விதத்தில், விஞ்ஞான ரீதியாக வடிவமைக்கப்பட்ட பல்வேறு வகையான முன்னேற்றகரமான விளையாட்டுக் கையுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. அதேவேளை, எமது தோட்டங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை, அவற்றின் தரத்திற்கும், நிலைபெறு தன்மைக்கும் உலகளவில் பிரசித்தி பெற்று, கொழும்பு தேயிலை ஏலத்தில் முன்னணி விலையினை தொடர்ச்சியாக வழிநடத்தி வருகின்றது. எமது பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள், எமது பன்மைத்துவம் மிக்க உலகளாவிய வாடிக்கையாளர் தளத்தின் சுவைகளுக்குப் பொருந்தக்கூடிய விதத்தில் எமது உள்நாட்டுக் கலைஞர்கள் மூலம் திறன்மிக்க வகையில் வழிநடத்தப்படுகின்றது. உள்நாட்டிற்குரிய அதேபோன்று உலகளாவிய சிந்தனையின் உபாய ரீதியான கலப்பின் ஊடாக ஹேலீஸ் உலகின் முன்னணி வர்த்தக நாமங்களுக்கு வழங்கல் செய்து, முக்கிய துறைகளில் உலகளாவிய செயற்பாட்டாளராக அதன் நிலையினைத் தனித்துவமாக இடம்பெறச் செய்துள்ளது.

### எதிர்காலத்தை வடிவமைத்தல்

பெறுமதி சேர்க்கப்பட்ட தீர்வுகள் மீதான மையப்படுத்தல் ஊடாக, எமது போட்டித்திறனைக் கூர்மையாக்குவதற்கு நாம் நாடுவதனால், வாடிக்கையாளரை மையப்படுத்திய புத்தாக்கத்தினைத் துரிதப்படுத்தலானது, எமது உபாய ரீதியான நிகழ்ச்சி நிரலுக்கு முக்கியமானதாக விளங்குகிறது, அண்மைய ஆண்டுகளில் நிலைபெறுதன்மை எமது புத்தாக்க இயக்கத்தில் மிகவும் தொடர்பினைக் கொண்டிருந்ததுடன், முக்கிய நிலைபெறுதன்மை பிரச்சினைகளைத் தீர்க்கின்ற எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான உற்பத்தி இயலளவுகளையும் செயலளவுகளையும் பின்பற்றுவதற்கு நாம் நாடியிருந்தோம். ஆண்டுக் காலப்பகுதியில் உற்பத்தி விருத்தியினையும், புத்தாக்க இயலளவுகளையும் வலுப்படுத்துவதில் துறைகள் முழுவதும் ரூபா 500 மில்லியனுக்கு மேல் நாம் முதலீடு செய்துள்ளோம். ஆண்டுக்கான முக்கிய வெற்றிக்கதைகளாக உயர் இரசாயன எதிர்ப்பாற்றல் மிக்க கையுறைகள் மற்றும் விசேடத்துவம் பெற்ற விளையாட்டுக் கையுறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற கைப் பாதுகாப்புத் துறையில் புதிய அபிவிருத்தியினை உள்ளடக்குகின்றது, புடவைத் துறையில் குழுமம் புத்தாக்கம் மிக்க துணி பன்பாக்க மீள் சுழற்சி தன்மைகளைத் தொடங்கியது. நிர்மாணப் பொருட்களில் அலுமெக்ஸ் பீஎல்சி, பல்வேறு வகையான அலுமீனியம் பெல்கனிகள் தளம் மற்றும் செயற்கைச் சுவர்கள் என்பவற்றை ஏற்றுமதிச் சந்தைக்கு வழங்கி, புத்தாக்கத்தைத் தொடங்கி வைத்தது. இப்புத்தாக்கங்கள், இவ்வறிக்கையின் 275 ஆம் பக்கத்தில் மேலும் விபரமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

உருவாக்க செயற்கை நுண்ணறிவில் திடீர் அதிகரிப்பு பல்வேறு ஆள்களம் முழுவதும் உள்ளடக்கத்தினை உருவாக்குவதற்கு செயற்கை நுண்ணறிவினை இயலச்செய்கின்ற இயந்திரக் கற்றலில் துரிதமான முன்னேற்றங்களுடன் தொழில்நுட்பவியல் புத்தாக்கங்களைக் கொண்ட புதிய யுகத்தில் முன்னணியாகக் காணப்படுகின்றது. சாத்தியமான தொழில் மாறுதல், அந்தரங்கப் பிரச்சினைகள் மற்றும் ஒழுக்கநெறிசார் கரிசனைகள் என்பன சந்தேகம் மற்றும் நிச்சயமின்மை என்ற பார்வையின் ஊடாக பொதுவான செயற்கை நுண்ணறிவு நோக்கிற்கு பல்வேறு மக்களையும், நிறுவனங்களையும் தூண்டியுள்ள அதேவேளை, ஹேலீஸ் ஆகிய நாம் வினைத்திறன்களுக்கும், செறிப்பான தரவு உள்நோக்குகளுக்கும், புதிய வியாபார வாய்ப்புகளுக்கும் முன்னோடியாக அவற்றைக் காண்கின்றோம். விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள குழுமத்தின் Gen Ai வழிகாட்டலானது, மேம்பட்ட தீர்மானம் மேற்கொள்ளல் ஊடாக, பெறுமதி உருவாக்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு எமது தொழிற்பாடுகளுக்கிடையில் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு இயலளவுகளை முனைப்புடன் உட்புகுத்துவதற்கு நாடுகின்றது.

### எமது மக்கள் : எமது சக்தி

இன்று ஹெலீஸ் குழுமத்திற்கு எமது மக்களைவிட மிக முக்கியத்துவம் மிக்கது எதுவுமில்லை. எமது அணி மற்றும் வாடிக்கையாளர்கள் தொடக்கம் நாம்

# தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமானவரின் சிந்தனைக் குறிப்புகள்

தொழிற்படுகின்ற உள்ளூர் சமூகங்கள் மற்றும் எமது பெறுமதிச் சங்கிலிப் பங்காளர்கள் வரை இது உள்ளடக்கியிருக்கின்றது. இலாபம் வினை ஊக்கத்திறன் நிலைபெறுதன்மை, புத்தாக்கம் மற்றும் வினைத்திறன் உள்ளடங்கலாக பெறுமதியின் ஒவ்வொன்றையும் இயக்குகின்ற பங்குடமைகளாக இது காணப்படுகின்றது. ஹேலீஸ் குழுமத்தின் தாக்குப்பிடிக்கும் தன்மையும், சுபீட்சமும், குழுமத்தின் தொடர்ந்து செல்லும் வெற்றியினையும், பெறுமதி உருவாக்கத்தினையும் உறுதி செய்வதற்கு நேர்மையையும், உயர்தர தொழில்சார் உன்னதத்தையும் இயலளவுகளையும் கொண்ட 36,000 ஊழியர்களுக்கும் மேற்பட்ட குறிப்பிடத்தக்க எமது அணியின் மூலம் இயக்கப்படுகின்றது. பணி உலகம் ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்ந்தும் படிப்படியாக வளர்ச்சியடைந்து மேம்பட்ட பதவி உரிமைத் திட்டமிடல் தீர்மானம் மேற்கொள்ளலைச் சுற்றி அதிகரிக்கும் பன்மைத்துவம் என்பவற்றை இயலச் செய்வதற்கு மிகுந்த தொழில் வழங்கும் தன்மை, ஆற்றலைப் பேணி வளர்க்கும் திட்டமிடலை இயலச்செய்கின்ற வலுவான தேர்ச்சிகளை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் நீண்டகால பெறுமதியினை உருவாக்குவதனை மையப்படுத்திய குழுமத்தின் மக்கள் உபாயம் பரிணாம வளர்ச்சியடைகின்றது. ஆண்டுக் காலப்பகுதியில், குடும்பம் - சிநேகம் மிக்க பணிச் சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, நாம் பல முன்முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். மகப்பேற்று விடுமுறை, குழந்தை கவனிப்பு ஆதரவு மற்றும் ஆலோசனைச் சேவைகளுக்கான பெறுவழி என்பவற்றை இது உள்ளடக்கியிருந்தது. அவர்களின் தொழில்சார் மற்றும் தனிப்பட்ட பொறுப்புகளைக் காத்திரமான விதத்தில் சமநிலைப்படுத்துவதில் ஊழியர்களுக்கு இது துணையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### பொறுப்புமிக்க மற்றும் வகை கூறுகின்ற ஆளுகை

இடையூறுகளில் இருந்து மீண்டும் மீண்டு வருவதற்கு, குழுமத்தின் எடுத்துக்காட்டப்பட்ட இயலுமையானது, வினை ஊக்கத்திறன் மற்றும் ஏற்றவாறு மாறத்தக்க தலைமைத்துவம் என்பன மீது மையம் கொள்கின்ற நிறுவனசார் எண்ணப்பாங்கினைத் தோற்றுவிப்பதில் துணையளித்துள்ள அதன் நோக்கத்திற்குப் பொருத்தமான ஆளுகைக் கட்டமைப்புகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ஆளுகைக் கட்டமைப்புகள் சபை மற்றும் GMC என்பவற்றுக்கிடையில் வலுவான அணிசேர்தலையும், ஈடுபாட்டினையும் வசதிப்படுத்துகின்றது. GMC முன்னெடுக்கப்படுகின்ற கூட்டு முயற்சிகளையும் கூட்டான தீர்மானம் மேற்கொள்ளலையும் வசதிப்படுத்துவதற்கு வாராந்தம் கூடுகின்றது.

ஆண்டு காலப்பகுதியில் பரம்பல்மிக்க வெளிநாட்டுச் சூழலை வழிநடத்துவதிலும், இடர்நேர்வு முகாமைத்துவத்தை வலிமைப்படுத்துவதிலும், சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகையின் உபாய ரீதியான ஒருங்கிணைப்பு மீதும் சபை தீவிரமாகக் கவனம் செலுத்தியது. சுயாதீன மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்களாக திரு. திமோதி ஸ்பெல்டேவின்டே மற்றும் திரு.யொஹான் பெரேரா ஆகியோரின் நியமனத்துடன், ஆண்டின் போது சபையின் இயலளவுகளும் உள்ளமைப்பும் வலிமைப்படுத்தப்பட்டன. அவர்கள் கொண்டு வருகின்ற அறிவு, தேர்ச்சி மற்றும் அனுபவம் என்பன சபையின் கலந்தாராய்வுகளின் விரிவுகளையும், செயல்திறன் வாய்ந்த தன்மையினையும் மேலும் மேம்படுத்தும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, நிறுவன ஆளுகை மீது 9ஆம் இலக்க பட்டியல் விதியினை வழங்கி, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்புடைய நிறுவன ஆளுகை விதிகளுக்கான திருத்தங்களை அறிவித்தது. 2025 ஜனவரி 01 ஆம் திகதி வரை நீடிக்கின்ற இணங்குவித்தலுக்காக, படிப்படியான கால வரையறையுடன் 2023 ஒக்டோபர் 01 தொடக்கம் இவ்விதிகள் நடைமுறைக்கு வந்ததுடன், வேண்டப்பட்ட ஏற்பாடுகளுடன் 2024 ஏப்ரல் 01 அளவில் குழுமம் முழுமையாக இணங்கியது. மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், இலஞ்சம் அல்லது ஊழலுக்கு எதிரான கொள்கையினை நடைமுறைப்படுத்தல் (பூச்சிய சகிப்பு அணுகுமுறையினை இது கட்டாயமாக்குகின்றது) மற்றும் பங்குதாரர் அத்துடன் முதலீட்டாளர் தொடர்பூட்டல் கொள்கை, பெயர்குறித்தல் மற்றும் ஆளுகைக் குழுவொன்றினை வகுத்தல், சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற பணிப்பாளர்கள் ஆகியோருக்கிடையில் கூட்டங்களை செயற்படுத்தல், அத்துடன் ஆண்டறிக்கையில் மேம்பட்ட வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.

இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் மூலமான நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடத்தைக் கோவையும் (2023) ஆண்டுக் காலப்பகுதியில் திருத்தம் செய்யப்பட்டது, புதிய கோவையின் முக்கிய மாற்றங்கள், மதிப்பீட்டினை வலுப்படுத்தல் மற்றும் சூழல், சமூகம் மற்றும் ஆளுகை இடர்நேர்வுகள் பற்றிய முகாமைத்துவம் மற்றும் வாய்ப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. இவற்றுக்காக குழுமத்தினுள் ஏற்கனவே பொறிமுறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

### ECO தீர்வுகள்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் சந்தை விரிவாக்கம், வழங்கல் சங்கிலி முகாமைத்துவம், சுற்றாடல் சமூக ஆளுகை உபாய ரீதியான ஒருங்கிணைப்பு

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 3,250 |
| PBT (ரூ. மில்.) வரிக்கு முந்தய இலாபம் | 68 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1,119 |
| காபன் சுவடு (tCo2e) | 5,522 |

### கைகளைப் பாதுகாத்தல்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மீது கவனம் செலுத்துதல், பிராந்திய விரிவாக்கம்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 13,889 |
| PBT (ரூ. மில்.) | 4,013 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 2,171 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 25,735 |

### சுத்திகரித்தல்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பதிகள் மற்றும் புத்தாக்கம், வழங்கல் சங்கிலி தாக்குப் பிடிக்கும் தன்மை மற்றும் பாதுகாப்பு

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 17,462 |
| PBT (ரூ. மில்.) | 6,107 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1,933 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 26,696 |

### ஆடைக் கைத்தொழில்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திக் கவனம் செலுத்தல், வர்த்தக நாமத்தை மையப்படுத்திய உபாயம், உபாயரீதியாக வேறுபடுத்திய சுற்றாடல், சமூகம் மற்றும் ஆளுகை

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 12,054 |
| PBT (ரூ. மில்.) | 3,719 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 3,285 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 43,953 |



சூழல், சமூகம் மற்றும் ஆளுகை ஒருங்கிணைத்தல் : உலகம் எவ்வாறு இருக்க வேண்டுமோ அவ்வாறு இருப்பதற்கு

இவ்வாண்டில் நாம் அனுபவித்த பதிவாகிய உயர்வான வெப்பநிலைகளும், தவறான வானிலைகளும், புவி சிக்கல் வாய்ந்த ஒன்று என்றும், உடைந்துவிடக்கூடிய முறைமை என்பதையும் எமக்கு பணிவுடன் ஞாபகமூட்டியதுடன், இயற்கை எம் அனைவரையும் விட மிகவும் சக்திவாய்ந்தது என்பதையும் காண்பித்தது. எதிர்காலம் பற்றி நாம் நோக்குகின்றமையினால், தொழில் உபாயத்திற்கு இன்றியமையாத நிலைபெறு தன்மை முன்னேற்றத்தை ஆக்கிக் கொள்வதன் மூலமும், பாரிய தாக்கத்திற்காக எமது தலையீடுகளை துரிதப்படுத்துவதன் மூலமும், நிலைபெறத்தக்க வியாபார தலைமைத்துவத்திற்கான புதிய யுகம் ஒன்றினை வரைவிலக்கணம் செய்வதற்கு, தனித்துவம் மிக்க வாய்ப்பு ஒன்று எம்மிடமுள்ளது என நான் நம்புகின்றேன்.

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களுக்கு மாறுதலடைதல், உயிர்ச்சுவட்டு எரிபொருள்களில் தங்கியிருப்பதைக் குறைத்தல் மற்றும் வேறு காபன் மயமாக்கத்தைக் குறைக்கும் செயற்பாடுகள் ஊடாக நாம் தீவிரமாகப் பின்பற்றுகின்ற இலக்கினை 2030 அளவில் நோக்கெல்லை 1 மற்றும் 2 பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தில் 30மு குறைப்பொன்றினைச் செலுத்தும் அதன் இலக்கினை அடைவதற்கு குழுமம் உறுதிபூண்டுள்ளது. இற்றை வரை குழுமம் ஏறத்தாழ 28 மெ.வொ மொத்த பிறக்க இயலளவுடன் குழுமம் முழுவதும் சூரிய மின்சக்தி உற்பத்தியில் ரூபா 5.00 பில்லியனை அண்மித்த மொத்த பிறப்பாக்க மேற்கொண்டுள்ளது. மேலும், இலங்கையில் சூரியசக்தி பொருத்துவதில் சந்தையின் முன்னணியாளர் என்ற வகையில், ஹேலீஸ் பென்டோன்ஸ், ஆண்டின் போது 200 மெ.வொ சூரிய சக்தி கொண்ட ஒட்டுமொத்த பொருத்தல்களுடன் நாட்டின் சூரிய சக்தியை நோக்கிய மாறுதலடைதலுக்குத் தூ ண்டுதலளிக்கின்றது.

துறை மட்ட சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகைக் குழுக்களை உருவாக்குதலுடன்கூடிய குழுமத்தின் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகைக் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கு உபாய ரீதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சபை பிரதிநிதித்துவத்துடன் உருவாக்கப்பட்ட இக்குழுக்களுக்கு துறைக்குப் பொறுப்பான சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை இடர்நேர்வுகளை இனங்கண்டு, முகாமைசெய்து, தணிக்கின்ற அதேவேளை, ஹேலீஸ் வாழ்க்கைக் கோவையின் அபிலாஷைகளுக்கு அணிசேர்கின்ற விதத்தில் துறையின் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை வழிகாட்டல்களை இயக்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. குழுமத்தினுள் காணப்படுகின்ற 9 ஏனைய கம்பனிகளுடன் ஒன்றிணைந்து ஹெலீஸ் பீஎல்சி, ஐக்கிய நாடுகள் உலகளாவிய உடன்படிக்கையின் 10 கோட்பாடுகளையும் கடைப்பிடித்துள்ளது. 2008 தொடக்கம் CEO Water Mandate நீர் கட்டாயப்படுத்தலின் அங்கீகாரம் அளிக்கும் நிறுவனமாகவும் ஹேலீஸ் இருந்து வருகின்றது. குழுமத்தின் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை இலக்குகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றம் இவ்வறிக்கையின் 100வது பக்கத்தில் தரப்பட்டுள்ளது.


## தொழில்நிலைப்போக்கு : வியாபார வாய்ப்புகள் பற்றிய மீளாய்வு

ஆண்டின் போது உள்நாட்டுச் சந்தையினை நோக்கி தலைப்பிடப்பட்ட குழுமத்தின் வருமான உள்ளமைப்பு வாடிக்கையாளர் மற்றும் சில்லறை அத்துடன் கருத்திட்டம் மற்றும் பொறியியல் துறைகளில் வளர்ச்சியினையும், இலங்கை ரூபாவின் பெறுமதியேற்றம் காரணமாக ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட துறைகளில் மிதமடைதலையும் எடுத்துக்காட்டுகின்றன. இதன் விளைவாக, உள்நாட்டு வியாபாரத்தில் இருந்தான வருமானப் பங்களிப்பு முன்னைய ஆண்டின் 38% உடன் ஒப்பிடுகையில் 46% ஆக அதிகரித்தது. இக்குறுகியகால இயக்கவாற்றல்களுக்கு மத்தியில் வெளிநாட்டுச் செலாவணியில் இருந்தான பங்களிப்பினை அதிகரிப்பதற்கும், புவியியல் ரீதியாக பன்முகப்படுத்தலைத் தூண்டுவதற்கும் குழுமம் நாடுவதனால், நாட்டிற்கு வெளியில் அது தொடர்ச்சியாக வளர்ச்சி வாய்ப்புகளைத் தேடியது.

பின்வரும் பிரிவுகள் குழுமத்தின் வியாபாரத் துறைகளின் செயலாற்றம் பற்றிய உயர்மட்ட பொது நோக்கொன்றினை வழங்குகின்றன. விரிவான சொத்துப்பட்டியல் மீளாய்வுகளுக்காக தயவு செய்து 114 - 245 வரையான பக்கங்களைப் பார்க்க.

### தூய்மைப்படுத்தல்

தூய்மைப்படுத்தல் துறையானது, வாடிக்கையாளர் உறவுகளை நிலைநிறுத்துதல், அதன் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தித் துறைகளை விரிவுபடுத்தல் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கு உபாய ரீதியான இடைத் தலையீடுகளைத் தூண்டுதல், அதன் வழங்கல் சங்கிலி, தாக்குப்பிடிக்கும் தன்மை என்பவற்றுடன் சவால்மிக்க ஆண்டில் பாராட்டத்தக்க செயலாற்றத்தினைக் கொண்டு சேர்த்தது. இலங்கை ரூபாவின் பெறுமதியேற்றம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட விலைக் குறைப்புகள் என்பன துறையின் வருவாயினை



### கட்டுமாணப் பொருட்கள்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல்
ஏற்றுமதியைத் தூண்டுதல், புத்தாக்கம் மற்றும் உற்பத்தி விருத்தி, செலவு முகாமைத்துவம் மற்றும் வினைத்திறன்கள்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 3,602 |
| PBT (ரூ. மில்.) | 232 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 774 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 9,519 |

### பெருந்தோட்டங்கள்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல்
புத்துயிர் பெறும் விவசாயம், தரத்தின் மீது கவனம் செலுத்துதல், கைத்தொழில் இயக்கவாற்றலை மாறுதலடையச் செய்தல்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 13,717 |
| PBT (ரூ. மில்.) | 3,525 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 15,360 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 26,122 |

### விவசாயம்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல்
புத்தாக்கம், பன்முகப்படுத்தல், பிராந்திய விரிவாக்கம்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 10,000 |
| PBT (ரூ. மில்.) | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | |
| காபன் தடப் பதிவு (tCo2e) | |

### நுகர்வோர் மற்றும் சில்லறை

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல்
முனைப்பான கையிருப்பு முகாமைத்துவம், செலவு முகாமைத்துவம் மற்றும் வினைத்திறன்கள், வாடிக்கையாளர் மையப்படுத்தல்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 25,591 |
| PBT (ரூ. மில்.) | 611 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 3,316 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 9,293 |

### ஓய்வு

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல்
உற்பத்தி மற்றும் சேவையியலளவுகளை வலுப்படுத்தல், வருமான பன்முகப்படுத்தல்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 3,773 |
| PBT (ரூ. மில்.) | (1,895) |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1,660 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 12,744 |

# தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமானவரின் சிந்தனைக் குறிப்புகள்

ரூபா 42.74 பில்லியனாக 29% ஆல் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்த அதேவேளை, வரிக்கு முந்திய இலாபம் ரூபா 6.11 பில்லியனாக 26% ஆல் விழ்ச்சியடைந்தது.

ஆண்டுக்கான முக்கிய முன்னுரிமைகளாக, முக்கிய சந்தைகளில் விரிவான ஊடுருவலுக்கு நாடுதல் மற்றும் சோடியம், அயன் மின் கலங்களுக்கான கடின காபன் உள்ளடங்கலாக, உயர் பெறுமதிமிக்க சக்தி சேமிப்பக காபனை உருவாக்குவதன் மீது முன்னெடுக்கப்படுகின்ற கவனம் செலுத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது, இத்துறை, அதன் தயாரித்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி இயலளவுகளை வலுப்படுத்தி, செலவுகளை உகப்பாக்கம் செய்வதற்கு மூலப்பொருள் வழங்குநர்களுடன் செயலூக்கம் மிக்க பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. அதன் மூலப்பொருள் பெற்றுக்கொள்ளலை பன்முகப்படுத்துவதில் துறையின் 7 வதுதயாரித்தல் தொழிற்சாலை பிலிப்பைன்ஸில் தொடங்கி வைக்கப்படவுள்ளது. ஆண்டின் போது, ஹேலீஸ் வாழ்க்கைக் கோவையுடன் அணி சேர்ந்த தனித்துவமான சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை வழிகாட்டல் ஒன்றான 'Activate" இனைத் தொடங்கி வைத்ததன் ஊடாக, சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகையினை உட்பொதியச் செய்வதற்கான அதன் கடமைப் பொறுப்பினையும் வலிமைப்படுத்தியது. துறைக்கான எதிர்கால எதிர்பார்க்கைகள் சாதகமாகக் காணப்பட்டு, சக்தி சேமிப்பகத் தீர்வுகளுக்கான கேள்வியை இயக்குகின்ற குறைந்த காபன் பொருளாதாரத்திற்கும், அதேபோன்று, அதிகரித்த அளவில் கண்டிப்பான நீர் மற்றும் மாசாக்கக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளுக்கும் உலகளாவிய மாறுதலினைப் பிரதிபலிக்கின்றது.


### கருத்திட்டம் மற்றும் பொறியியல்

ஹேலீஸ் பென்டன்ஸ் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் இத்துறை வரிக்கு முந்திய இலாபத்தினை ரூபா 4.33 பில்லியனாக மும்மடங்கிற்கும் அதிகமாக ஈட்டி குழுமத்திற்கான இரண்டாவது பாரிய பங்களிப்பாளராகத் தோற்றம் பெற்றதன் மூலம் ஆண்டின் போது மனங்கவரத்தக்க செயலாற்றத்தினை வழங்கியது. இத்துறையின் செயலாற்றமானது, பெருமளவில் மீள் புதுப்பிக்க சக்தி கொத்தணியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி, வதிவிட சூரிய சக்தித் துறையில் நுழைவதில் உபாய ரீதியான முன்னோக்கிய நோக்கு மற்றும் கூரைமேல் அமைந்த சூரிய சக்தி PV துறையில் சந்தையில் முன்னணியாளராக கம்பனிக்கென இன்றியமையாது காணப்படுகின்ற வலிமையான விற்பனைக் குழுவினைப் பணிக்கு அமர்த்துவதன் ஊடாக தீவிரமான ஊடுருவலை நாடுதல் ஊடாக தூண்டப்பட்டிருந்தது. இலாப எல்லைகளும் ஆண்டின் போது மேம்பட்டு அளவு வளர்ச்சிக்கு இசைவாக அளவுமட்ட வினைத்திறன்களைப் பிரதிபலித்தன.

100 ஆண்டுகளைக் கொண்ட வரலாற்றுடன் இயங்கிய குடும்பத்திற்குச் சொந்தமான பென்டன்ஸ் 2016 இல் கையகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்க மாறுதலடைதலின் தொடக்கத்தினைக் குறித்துக்காட்டியது. புதிய தலைமைத்துவ இயலளவுகள் செயலாற்றத்தினால் தூண்டப்படும் நிறுவனசார் கலாசாரம் மற்றும் வளர்ச்சி மனோபாவம் என்பவற்றைப் பேணி வளர்த்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்த உபாய ரீதியான திருத்தியமைத்தல் ஒன்றின் ஊடாக குழுமம் பென்டன்ஸ் இனை மறுசீரமைப்புச் செய்தது. செயலாற்றத்தில் சடுதியான திருப்பத்தினைப் பதிவு செய்த அதேவேளை, குறிப்பிடத்தக்க வளர்ச்சி உள்ளார்ந்ததுடன் கூடிய, வளம் பெறத்தக்க நிறுவனம் ஒன்றாகத் தோற்றம் பெறுவதற்கு இத்தலையிடுகள் துறையினை இயலச் செய்துள்ளன. குழுமத்தின் இலாபத்தன்மைக்கு ஹேலீஸ் பென்டோன்ஸ் இன் வளர்ச்சியடைகின்ற முக்கியத்துவத்தினைப் பிரதிபலித்து இவ்வறிக்கையில் வேறான துறை ஒன்றாக இது வகைப்படுத்தப்பட்டுள்ளது. 2030 அளவில் குறைவான காபன் பொருளாதாரத்தை நோக்கி மாறுதலடைந்து சமநிலையை எய்துவதற்கான அரசாங்கத்தின் அபிலாஷைகளைக் கருத்திற் கொள்கையில், நடுத்தரகாலம் தொடக்கம் நீண்ட காலத்தில் மீள் புதுப்பிக்கத்தக்க சக்திக்கு அபரிமிதமான வாய்ப்புகள் காணப்படுகின்றன என நாம் நம்புகின்றோம்.

### கைப் பாதுகாப்பு

கைப் பாதுகாப்புத்துறையின் செயலாக்கமானது, இலங்கை ரூபாவின் பெறுமதியேற்றம் மற்றும் உலகளாவிய கேள்வி தளர்வடைந்தமையினால் அளவுகளில் சிறிதளவான வீழ்ச்சி என்பவற்றின் நோக்கில் வருவாய் 16மூ மூலம் வீழ்ச்சியடைந்தமை மூலம் அவ்வப்போதான வெளிநாட்டு அழுத்தங்களைப் பிரதிபலித்தது. மூலப்பொருட்கள் மற்றும் வேறு செலவுகள் உயர்வடைதல்கள் மூலம் இலாபத்தன்மை எல்லைகள் அழுத்தத்திற்குள்ளாகி ஆண்டின் போது துறையின் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 4.01 பில்லியனாக 24% ஆல் வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. துறையின் ஐரோப்பிய தொழிற்பாடுகளின் செயலாற்றம் எதிர்பார்க்கைகளுக்கும் கீழே காணப்பட்டு, அப்பிராந்தியத்தில் இருந்து கிடைத்த குறைவடைந்த கேள்வி நிலைமைகளை எடுத்துக்காட்டியது.



#### கைத்தொழில் உள்ளீடுகள் சக்தி மற்றும் வலு

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் வெளிநாட்டு விரிவாக்கம், நிலைபேறான புத்தாக்கம், டிஜிட்டல் இயலளவுகளை வலுப்படுத்தல்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 4,631 |
| PBT (ரூ. மில்.) | 1,339 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 311 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 803 |

#### போக்குவரத்தும் தளவாடங்களும்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளை விரிவுபடுத்தல், பிராந்திய விரிவாக்கம் ஊழியர் விழுமிய முன்மொழிவினை அதிகரித்தல்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 26,003 |
| PBT (ரூ. மில்.) | 3,671 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 2,899 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 45,863 |

#### கருத்திட்டம் மற்றும் பொறியியல்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் சூரிய சக்தியில் முன்னணி நிலையினை உறுதிப்படுத்தல், உற்பத்தி மற்றும் சேவைப் பிரிவுகளை விரிவுபடுத்தல், தர உத்தரவாதம் மீது கவனம் செலுத்துதல்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 9,586 |
| PBT (ரூ. மில்.) | 4,333 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1,492 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 1,432 |

#### தேயிலை ஏற்றுமதிகள்

மூலோபாய அவதானம்

உபாயரீதியான கவனம் செலுத்தல் புத்தாக்கம் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி பிராந்திய விரிவாக்கம், தரத்தின் மீது கவனம் செலுத்துதல்

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 1,480 |
| PBT (ரூ. மில்.) | 824 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 312 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 384 |

#### ஏனையவை

| | |
|---|---|
| பொருளாதாரப் பெறுமதி (ரூ. மில்.) | 12,023 |
| PBT (ரூ. மில்.) | 2,380 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 387 |
| காபன் தடப் பதிவு (tCo2e) | 592 |

மத்திய கிழக்கு, ஆபிரிக்கா போன்ற பொருத்தமான சந்தைகளுக்குள் ஊடுருவுவதை துறை நாடிய அதேவேளை, வளர்ச்சிக்கான முக்கிய சந்தையாக இந்தியா, குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கின்றது. புத்தாக்கம் உபாய ரீதியாக முக்கியத்துவம் மிக்கதாகக் காணப்படுவதுடன், ஆண்டின் போது இத்துறை, முன்னணி சர்வதேச விளையாட்டுப் பொருள் சில்லறை விற்பனையாளருக்கு சேவையளிக்கின்ற பல்வேறு வகையான விசேடத்துவம் மிக்க விளையாட்டுக் கையுறைகள் உள்ளடங்கலாக பல்வேறு பிரமிக்க வைக்கும் உற்பத்தி முன்மொழிவுகளை இத்துறை தொடங்கி வைத்தது. DPL Pulse உடனான துறையின் சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை வழிகாட்டலை தொடங்கி வைத்ததன் ஊடாக, புதிய சந்தைகளையும், வாடிக்கையாளர் வகுப்பினர்களையும் அணுகுவதற்கான போட்டிமிக்க துறையாக சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகையில் இருந்து அனுகூலம் அடைவதற்கும் இத்துறை முனைகின்றது. நடுத்தர காலம் தொடக்கம் நீண்டகாலம் வரையிலான எதிர்கால எதிர்பார்க்கையானது, முகூகிய சந்தைகளில் மீட்சியடைகின்ற கேள்வி நிலைமைகள் மற்றும் உற்பத்தியியலளவுகளை, குறிப்பாக, விசேடத்துவம் பெற்ற கையுறைகளை வலுப்படுத்துல் துறையின் உபாய ரீதியான தலையீடுகள் என்பவற்றைக் கருத்திற் கொள்கையில் சாதகமாக காணப்படுகின்றது.

### புடவை வகைகள்

விரைவுத் திறனைக் கட்டியெழுப்புவதில் உபாய ரீதியான முன்கூட்டிய நோக்குடன் ஒன்றிணைந்து அடுக்கு 1 வர்த்தக நாமங்களுடன் உறவுகளை வலுப்படுத்தியமை, சவால்மிக்க ஆண்டில் மனங்கவரத்தக்க வளர்ச்சியினை வழங்குவதற்கு புடவைகள் துறையினை இயலச் செய்தது. முக்கிய சந்தைகளில் அதிகரித்த தளம்பல்களினதும், அதன் விளைவாக ஏற்பட்ட கட்டளைகளின் பிற்போடுதல்களினதும் நோக்கிலும், அதேபோன்று அதிகரிக்கின்ற விலை அழுத்தங்கள் மூலமும் வருவாய் 18% ஆல் வீழ்ச்சியடைந்த அதேவேளை, துறையின் மிகையற்ற தன்மையும், விரைவுத்திறன்மிக்க பணியாற்றும் விதங்களும், வாடிக்கையாளர்களுக்கான உற்பத்திச் செயன்முறை நேரத்தினைக் கணிசமானளவு குறைப்பதற்கு அதனை இயலச் செய்தது. இதன் மூலம் வாடிக்கையாளர் உறவுகளை நிலைநிறுத்தி கட்டளைகளைப் பேணியது. அதேவேளை, நூல் வழங்குநர்களுடன் முன்னெடுக்கப்படுகின்ற மற்றும் முனைப்பான பேச்சுவார்த்தைகளும் நிலைபெறு தன்மை மீது கவனம் செலுத்துவதன் ஊடாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற செலவுச் சிக்கனங்களும், துறை அதன் இலாப எல்லைகளை விரிவுபடுத்துவதற்கு இயலச் செய்து, ஆண்டின் போது வரிக்கு முந்திய துறையின் இலாபம் ரூபா 3.72 பில்லியனாக 23% ஆல் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது.

புத்தாக்கத்தை முன்னணியாகக் கொண்ட வளர்ச்சி முக்கிய உபாய ரீதியான தூண் ஒன்றாக விளங்குவதன் மூலம், அடிப்படை, மரபு ரீதியான பருத்தி அடிப்படையில் அமைந்த துணி வகைகளில் இருந்து பிரீமியம் சுழல் வகைக்கு துறை நாடிச் செல்கின்றமை, இயற்கை மற்றும் செயற்கை நாரிழை இரண்டிலும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் என்பவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது. துறையின் போட்டித் திறனானது, அதன் நிலைபெறத்தக்க உற்பத்தி மற்றும் புத்தாக்கங்களுக்காக சர்வதேச ரீதியாக பெற்றுக்கொண்டுள்ள அங்கீகாரத்தினால், தொழிற்துறையில் நிலைபெறு தன்மையில் முன்னோடியாகவும், முன்னிலையிலும் அதனை நிலைநிறுத்துவதன் மூலம் தீட்டப்பட்டுள்ளது. அதன் நிலைபெறத்தக்க பயணத்தில் முக்கிய சாதனையாக கம்பனியானது, விஞ்ஞான அடிப்படையில் அமைந்த இலக்கு முயற்சிகளின் கீழ், அவ்வாறு செய்கின்ற இலங்கையின் முதலாவது அமைப்பு ஒன்றாக இது விளங்குகின்றது. அதன் புகை வெளியேற்றி இலக்குகளின் உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொண்டது. தொழிற்துறை தோற்ற அமைப்பு துரிதமாக படிப்படியாக வளர்ச்சியடைவதற்கு ஏற்ப மாற்றமடைகின்ற சந்தை இயக்கவாற்றல்களுக்கு துரிதமாக ஏற்றவாறாகிக் கொள்ளக்கூடிய விரைவுத்திறன் மிக்க தொழிற்பாட்டு மாதிரிகளைக் கட்டியெழுப்புவதற்கு தயாரிப்பாளர்கள் வேண்டப்பட்டவர்களாக இருப்பர். குறுகியகாலம் தொடக்கம் நடுத்தர காலம் வரையிலான துறையின் முக்கிய முன்னுரிமைகள், அடுக்கு 1 வாடிக்கையாளர்களைத் தக்க வைத்தல். செயற்கை நாரிழையில் சந்தைப் பங்கினை வலுப்படுத்தல், நிலைபெறத்தக்க உற்பத்திகளின் அதன் சொத்துப்பட்டியலில் இருந்தான பங்களிப்புகளை அதிகரித்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

### பெருந்தோட்டங்கள்

ஆண்டின் போது அளவு வளர்ச்சியினைப் பதிவு செய்வதற்காக இத்துறை விடாப்பிடியான தொழிலாளர் பற்றாக்குறைகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தீவிரமடைகின்ற உள்ளார்ந்தங்கள் உள்ளடங்கலாக, பல எண்ணிக்கையான பாதக நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கும் தன்மையினை எடுத்துக்காட்டியது. வருவாய் ரூபா 18.13 பில்லியனாக 13% அதிகரித்து, துறைக்கு ஹொரண பிளான்டேஷன்ஸ் பீஎல்சி யினை ஒருங்கிணைத்ததைப் பிரதிபலித்தது. எனினும், ஆண்டின் போது சுமார் 18மூ ஆல் விலைகளின் வீழ்ச்சி மூலம் (ரூபா நியதிகளில்) முன்னைய ஆண்டின் உயர்வான பதிவிலிருந்து தேயிலை விலைகள் இலகு நிலைக்குத் திரும்பியன் மூலம் இலாபத் தன்மை பாதிக்கப்பட்டது. இது, அதிகரிக்கின்ற செலவுகளுடன் ஒன்றிணைந்து, துறையின் வரிக்கு முந்திய இலாபத்தில் ரூபா 3.53 பில்லியனாக 34% வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

ஆண்டு காலப்பகுதியில் துறையின் உபாயமானது, மிகவும் சமத்துவமான ஊதிய மாதிரிகள் மற்றும் மீள் உருவாக்குகின்ற விவசாய நடைமுறைகள் ஊடாக, சமூக ரீதியான வியாபாரத் தொழில் முயற்சிகளை உருவாக்குவதன் மூலம், பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் மாறுதலடையச் செய்வதனை நோக்கி திசைதிருப்பப்பட்டிருந்தது. சுற்றாடல் ரீதியான நிலைபெறு தன்மையில், தொழிற்துறை முன்னணியாளராக, துறை, அண்மைய ஆண்டுகளில் சூழலியல் முறைமைகள், மண் நிலைமைகள் மற்றும் பயிர்கள் என்பவற்றை மறுசீரமைப்பதை நோக்காகக் கொண்ட மீள் உருவாக்க விவசாய நடைமுறைகளைத் தழுவிக் கொள்வதற்கு நாடியது. குறுகியகால காலம் தொடக்கம் நடுத்தர காலம் வரையான இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் பற்றிய எதிர்கால எதிர்பார்க்கையானது, ஏதோவொரு வகையில் நிச்சயமற்றதாகக் காணப்பட்டு, தொழிலாளர் சவால்கள், வீழ்ச்சியடைகின்ற விளைச்சல் மற்றும் அதிகரிக்கின்ற உற்பத்திச் செலவு என்பனவற்றைப் பிரதிபலிக்கின்றது. இப்பின்னணிக்கு எதிராக எமது தோட்டத் தொழிற்பாடுகளை நவீனமயப்படுத்தி, மாற்றம் ஏற்படுத்துவதற்கும், அதிகரித்த தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் நிலைபேறான விவசாய நடத்தைகள் என்பவற்றை இயக்குவதற்குமான தற்போது முன்னெடுக்கப்படும் முயற்சிகள், துறையினை பயன்மிக்கதாக நிலைநிறுத்தி, அனைத்து மூன்று பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளும் மிகவும் இலாபகரம் மிக்கதாகவும், நிலைபெறத்தக்கதாகவும், இலங்கையில் உயர்தரம் மிக்க தேயிலை உற்பத்தியாளர்களாகவும் அவற்றின் நிலையினைத் தக்க வைத்துக்கொள்ளக்கூடியதாக விளங்குவதற்கு இயலச் செய்யும்.

### விவசாயத்துறை

விவசாயத் துறையானது, வெளிவாரி சவால்களுக்கு எதிராகத் தாக்குப்பிடிக்கத் தக்கதாக இருப்பதற்கு அதன் வியாபாரப் பன்முகத்தன்மை மற்றும் அதன் வர்த்தக நாமங்கள் அத்துடன், உறவுகள் என்பவற்றின் வலிமை ஆகியவற்றிலிருந்து அனுகூலமடைந்தது. விளைச்சல் பாதுகாப்புக் கொத்தனி மற்றும் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் என்பனவற்றின் வலுவான செயலாற்றத்தின் மூலம் இயக்கப்பட்டு,

# தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமானவரின் சிந்தனைக் குறிப்புகள்

துறையின் வருவாய் ஆண்டின் போது ரூபா 34.88 பில்லியனாக 6மூ ஆல் அதிகரித்தது. மேலும், ஆண்டின் போது துறையின் வரிக்கு முந்திய இலாபம் ரூபா 3.02 பில்லியனாக 40% ஆல் வீழ்ச்சியடைந்தமை மூலம் முன்னைய ஆண்டின் உயர்வான பதிவிலிருந்து இயல்புநிலைக்குத் திரும்பியது.

விளைச்சல் பாதுகாப்புத் துறையானது, சந்தை முன்னணி அந்தஸ்தினை அடைந்து கொள்வதற்கு துரிமாகச் செலுத்தும் சக்தியினைப் பெற்றுக்கொண்டிருந்த அதன் உற்பத்திப் படைப்புகளை வலிமைப்படுத்தியது. அதேவேளை, அதன் சந்தைப் பங்கினை அதிகரித்துக் கொண்டமையாலும், புதிய பிரிவுகளுக்கு அதன் உற்பத்திப் படைப்புகளை விரிவுபடுத்தியமையினாலும், வெளிநாட்டுத் தொழிற்பாடுகள் (ஹேக்கெம் பங்களாதேஷ் மூலம் பிரதிநிதித்துவப்படுத்திய) வருவாய்களுக்கான முக்கிய பங்களிப்பாளர்களாக இருந்தன. ஆண்டின் போது, பொலியத்திலீன் குழாய் தயாரித்தல் தொழிற்சாலையினை நிறுவி, அதனூ டாக இலங்கை விவசாயக் கைத்தொழிலுக்கு முன்னேற்றகரமான நீர்ப்பாசனத் தீர்வுகளை வழங்கியதன் ஊடாக, இத்துறை புதிய சந்தைப் பிரிவினுள் நுழைந்தது. முன்னைய ஆண்டில் கையகப்படுத்தப்பட்டு, இவ்வாண்டின் போது வர்த்தக ரீதியான உற்பத்தியினைத் தொடங்கிய தேங்காய்ப் பால் தொழிற்சாலையினைத் தரமுயர்த்தி மறுசீரமைப்பதிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன. உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதிலும், வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளிப்பதிலும் அதன் இன்றியமையாத வகிபாகத்தைக் கருத்திற்கொள்கையில், இலங்கையின் விவசாயத்துறைக்கான எதிர்கால எதிர்பார்க்கையானது நம்பிக்கையளிக்கின்றது. தொழிற்துறையின் நிலைபெறு தன்மையினையும், அதன் மீது தங்கியிருக்கின்ற வாழ்வாதாரங்களையும் உறுதி செய்வதில் இடையறாத, ஆக்கபூர்வமான மற்றும் சான்று அடிப்படையில் அமைந்த கொள்கை முக்கிய முன்தேவைப்பாடு ஒன்றாக விளங்குகின்றது. தொழிற்துறையில் முன்னணி செயற்பாட்டாளர் என்ற வகையில், எமது விவசாயிகளின் அமைப்பு முறைமை முழுவதும் நவீன மற்றும் நிலைபெறத்தக்க விவசாய நடைமுறைகளைப் பரப்புவதன் மூலம், அது நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கு நாம் தொடர்ந்தும் ஆதரவளிப்போம்.

### போக்குவரத்து ஏற்பாட்டியல் துறை

இத்துறையின் செயலாற்றமானது, கப்பல் கட்டணங்களில் விழ்ச்சி, இலங்கை ரூபாவின் பெறுமதியேற்றம் அதேபோன்று, அதிகரிக்கின்ற புவிசார் பதற்றங்களுக்கு மத்தியில் தளம்பல் மிக்க வர்த்தக நடவடிக்கை என்பன உள்ளடங்கலாக ஆண்டின் போது பல்வேறு கோணங்களிலும் நிலவிய சவால்களைப் பிரதிபலிக்கின்றது. அதற்கமைய, வருவாய் ரூபா 91.35 பில்லியனாக 32% யினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, வரிக்கு முந்திய இலாபமும் முன்னைய ஆண்டின் ரூபா 15.00 பில்லியன் கொண்ட உயர்வான பதிவுகளில் இருந்து ரூபா 3.67 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது. இப்பின்னணிக்கு எதிராக, துறையின் உபாயமானது, ஒன்றிணைந்த தொழிற்பாடுகளுக்கான அதன் முயற்சிகளைப் பிரதிபலித்த அதேவேளை, எதிர்கால வளர்ச்சியினைச் செலுத்துவதற்காக உறவுகளைத் தக்க வைத்தல் மற்றும் இயலளவுகளைக் கட்டியெழுப்புதல் என்பவற்றை மையப்படுத்திக் காணப்படுகின்றது.

ஆண்டின் போது வளர்ச்சிக்கான மிகவும் முக்கியத்துவம் மிக்க வாய்ப்புக்களை எடுத்துக்காட்டியமையினால், பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய மூன்று சந்தைகளையும் அடையாளம் கண்டு, அதன் சர்வதேச விரிவாக்க உபாயத்தினைத் திருத்தியமைத்தது. பரந்த சேவைகள் சொத்துப்பட்டியல்களை வழங்குவதற்கும், ஆழமான ஊடுருவலைத் தூண்டுவதற்கும், இப்பிராந்தியங்களில் நிறுவப்பட்ட உறவுகளிலிருந்தும், சந்தைப் பிரசன்னத்திலிருந்தும் அனுகூலமடைவதற்கு துறை உத்தேசிக்கின்றது. ஆண்டின் போது முக்கிய சாதனையாக இந்தியாவின் முக்கிய விமான நிறுவனமான எயார் இந்தியாவினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஜெனரல் சேல்ஸ் ஏஜென்ஸிக்கான போட்டி விலை கோரலை துறை வெற்றி பெற்றுக்கொண்டமை (பயணம் மற்றும் விமானசேவைக் கொத்தணி ஊடாக) அமைந்திருந்தது. துறைக்கான குறுகியகால மற்றும் எதிர்கால எதிர்பார்க்கையானது, புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பிராந்திய நெருக்கடிகள் என்பவற்றில் அண்மைக்கால அதிகரிப்புக்களைக் கருத்திற் கொள்கையில் நிச்சயமற்ற அளவினால் தெளிவற்றதாகக் காணப்படுகின்றது. அதாவது, இலங்கையின் துறைமுக நடவடிக்கை பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைதல் மற்றும் ஏற்றுமதிகளை நோக்கிய கொள்கை சார்ந்த திணிப்பு என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்ட வலுவான, நீண்டகால வளர்ச்சிக்காக இடம்பெறச் செய்யப்பட்டுள்ளது. துறையின் பிராந்திய உபாயம் மற்றும் வலுவான வர்த்தக நாமம், விரிவான வாடிக்கையாளர் மற்றும் முதன்மை உறவுகள் என்பன மேல்நோக்கிய, உள்ளார்ந்த ஆற்றலை செயல்திறன்வாய்ந்த விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கும், போக்குவரத்து மற்றும் ஏற்பாட்டியல் துறையில் இலங்கையின் ஒப்பற்ற முன்னோடியாக அதன் நிலையினைத் தக்க வைப்பதற்கும் ஹேலிஸ் அட்வான்டிஸினை இடம்பெறச் செய்துள்ளது.

### கைத்தொழில் உள்ளீடுகள் மற்றும் மின்சக்தி எரிசக்தி

இத்துறையானது, கைத்தொழில் மூலப்பொருட்களுக்காக, பிராந்திய சந்தைகளில் சிறந்த வளர்ச்சியினைக் காண்பித்த கைத்தொழில் சார்ந்த உள்ளீடுகளின் கொத்தணி மூலம் முன்னிலை வகித்து, ரூபா 9.73 பில்லியனாக 12% கொண்ட வருமான வளர்ச்சியினைக் கொண்டு சேர்த்தது. எனினும், வாடிக்கையாளர் செலவிடலில் குறிப்பான ஆண்டின் முதல் அரைப் பகுதியின் போது வீழ்சியினைக் கருத்திற் கொள்கையில், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட கைத்தொழில்களுக்கான கேள்வி குறைவடைந்து காணப்பட்டது. ஒட்டுமொத்தமாக துறையின் வரிக்கு முந்திய இலாபம் ஆண்டின் போது ரூபா 1.34 பில்லியனாக 10% ஆல் வீழ்ச்சியடைந்தது.

கைத்தொழில்களில் சுற்றாடல் காரணிகள் பற்றிய அதிகரிக்கின்ற விழிப்புணர்வைக் கருத்திற் கொள்கையில், கைத்தொழில் மூலப்பொருட்களின், அதன் உற்பத்தி சொத்துப்பட்டியலுடன் இணைந்த நிலைபெறு தன்மையினை துறை தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. Avery Weigh-Tronix (UK) இக்கான முகவரான்மையினை வெற்றிகரமாகப் பெற்றுக்கொண்டு, அதன் உலகளாவிய கோட்பாடுகள் சொத்துப்பட்டியலையும் விரிவுபடுத்தியது. ஆண்டின் போது வாக்கை அறிவியல் லைப்சயன்சஸின் (Lifesciences) செயலாற்றலும் மேம்பட்ட அதேவேளை, எஞ்ஜினியரின் சொலூஷன்ஸின் (Engineering Solutions) செயலாற்றம் நலிவடைந்து, கேள்வியின் மூலம் குறைவடைந்து நிர்மாணப் பெறுமதி சங்கிலிகளுக்கிடையில் திரவத்தன்மைத் தடைகளைப் பிரதிபலித்தது.

அதேவேளை, மின்சக்தி மற்றும் எரிசக்திக் கொத்தணியானது, சாதகமான வானிலை துணையளிக்கின்ற மின் உற்பத்தி மூலம் துணையளிக்கப்பட்டு, வரிக்கு முந்திய இலாபத்தில் 2% இனால் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும், வருவாயில் சிறிதளவு வீழ்ச்சியினைக் காண்பித்தது.

### தேயிலை ஏற்றுமதிகள்

ஆண்டின் போது அமைக்கப்பட்டிருந்த அறிக்கையிடல் பிரிவான தேயிலை ஏற்றுமதிகள், முன்னணி பெறுமதி சேர்க்கப்பட்ட மற்றும் மொத்த தேயிலை ஏற்றுமதியாளரான Mabroc Teas (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் இலங்கை தேயிலை பிரித்தெடுக்கப்பட்ட பவுடர் மற்றும்

தேயிலை நறுமணம் என்பவற்றில் புத்தாக்கம் மிக்க தயாரிப்பாளரும், ஏற்றுமதியாளருமான Martin Bauer ஹேலீஸ் (பிரைவெட்) லிமிட்டெட் என்பன மூலம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. புதிய வாடிக்கையாளர் கையகப்படுத்தல்கள் ஊடாக Mabroc மற்றும் Martin Bauer இரண்டும் அளவு வளர்ச்சியினை வழங்கியதன் மூலம், சவால்மிக்க ஆண்டில் துறை வலுவான தொழிற்பாட்டு செயலாக்கத்தினை எடுத்துக்காட்டியது. எனினும், இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றத்தினால் வருவாய் பாதிக்கப்பட்டது. இது, ரூபா 12.20 பில்லியனாக 3% வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. குறைவான உற்பத்தி அளவுகள் மற்றும் உயர்வடைகின்ற உற்பத்திச் செலவு என்பவற்றுக்கு மத்தியில், ஒப்பீட்டளவில் உயர்வான தேயிலைச் செலவு மூலம் துறையின் இலாபத்தன்மை மேலும் பாதிக்கப்பட்டிருந்தது. இது, வரிக்கு முந்திய இலாபம் ரூபா 823.65 மில்லியனாக 41% ஆல் வீழ்ச்சியடையச் செய்தது.

Mabroc, குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய உள்ளார்ந்த ஆற்றலைக் காண்பிக்கின்ற சந்தையான சீனாவுக்கு இலங்கையின் பாரிய தேயிலை ஏற்றுமதியாளராக அதன் நிலையினைத் தக்க வைத்தது. போலந்தில் முன்னணி விரைவாக விற்பனையாகும் வாடிக்கையாளர் பொருட்கள் (FMCG) விநியோகத்தரில் முதலீடு செய்த அதேவேளை, கென்யாவின் லும்பாசாவில் முழுமையான வசதி கொண்ட தேயிலை ஏற்றுதிக் கம்பனி ஒன்றினைத் தாபித்தல், இதன் மூலம் அதன் வழங்கல் சங்கிலியினைப் பன்முகப்படுத்தல் ஊடாக கம்பனி அதன் சந்தை விரிவாக்கத்தினையும் முன்னெடுத்தது. அதேவேளை, மாட்டின் புரூவர், நறுமணம் மற்றும் செறிவு கொண்ட அதன் சொத்துப்பட்டியலை விரிவுபடுத்துவதற்கான அதன் உற்பத்தி இயலளவுகளை வலிமைப்படுத்திய அதேவேளை, புதிய வாடிக்கையாளர்களைச் சென்றடைவதற்கு மாட்டின் புரூவர் குழுமத்தின் வர்த்தக நாமம் மற்றும் சந்தை அடைவு என்பவற்றில் இருந்து அனுகூலமடைந்தது. நாட்டின் பெருந்தோட்டத்துறையில் காணப்படும் சிக்கல் வாய்ந்த தன்மைகள் மூலம், குறுகியகாலம் தொடக்கம் நடுத்தகாலம் வரை வெகுவாகப் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கின்ற போதிலும், பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை மற்றும் பிரித்தெடுக்கப்பட்ட பொருட்களுக்கான உலகளாவிய கேள்வி இயக்கவாற்றல் சாதகமாகக் காணப்படுகின்றது. இச்சவால்களைத் திசைப்படுத்துவதில், அதன் போட்டித் திறனை கூர்மையாக்குகின்ற அதேவேளை, புதிய சந்தைகளைச் சென்றடைந்து, அதன் வழங்கல் சங்கிலிகளைப் பன்முகப்படுத்துவதற்கு புத்தாக்கம் மற்றும் பெறுமதிசேர்க்கப்பட்ட படைப்புகள் என்பன மீது துறை தொடர்ந்தும் கவனம் செலுத்தும்.

### நிர்மாணப் பொருட்கள்

ஆண்டின் போது துறைக்கான நன்கு முக்கியத்தும் மிக்க ஏற்றுமதிச் சந்தைகளின் வளர்ச்சியை முன்னெடுப்பதில் உபாய ரீதியான தொலைநோக்கு, குறைவடைந்த உள்நாட்டுக் கேள்வியினை முறியடிப்பதற்கு அதனை இயலச் செய்தது. ஏற்றுமதி அளவுகள் ஆண்டின் போது 21% ஆல் அதிகரித்தன, ஆண்டில் இது ஒட்டுமொத்த அளவு வளர்ச்சியினை நோக்கிப் பங்களித்தது. வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்வதை உறுதி செய்யும் பொருட்டு வாடிக்கையாளர்களுக்கு செலவு குறைப்புக்களின் நன்மையினை துறை ஈடுபடுத்தியமையினால் வருவாய் ரூபா 9.94 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது, எவ்வாறாயினும், நிதிச் செலவுகளில் மற்றும் வரிச் செலவுகளில் குறிப்பிடத்தக்க குறைவு மூலம் ஒட்டுமொத்த இலாபத்தன்மை நிலைநிறுத்தப்பட்டு, கம்பனியின் வரிக்கு முந்திய இலாபத்தில் ரூபா 231.72 மில்லியனாக 51% ஆக அதிகரிப்பதற்கு வழிவகுத்தது.

ஆண்டின் போது வளர்ச்சியடைகின்ற ஏற்றுமதிகள் உபாய முக்கியத்துவம் மிக்கவையாக அமைந்திருந்ததுடன், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சந்தைகளில் துறை புதிய வாடிக்கையாளர்களையும் நாடிச் சென்றது. ஏற்றுமதிச் சந்தைகளுக்கு சேவையளிக்கும் அதேபோன்று நீங்களாகவே செய்து கொள்ளுங்கள் என்ற உற்பத்தி வகையினையும் கைத்தொழில் தீர்வுகள் பிரிவினையும் மேம்படுத்தி, பல்வேறு பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளைச் சேர்த்தமையுடன் அதன் உற்பத்தி வகையினை இத்துறை விரிவுபடுத்தியது. இலங்கையின் நிர்மாணத்துறை, படிப்படியாக மீட்சியடைவதனையும், கைத்தொழில் மற்றும் வதிவிட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் எதிர்பார்க்கப்படும் புத்துயிர் பெறுதலையும் கருத்திற் கொள்கையில் அலுமெக்ஸிற்கான எதிர்கால எதிர்பார்ப்பு நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. குறுகிய காலம் தொடக்கம் நடுத்தர காலம் வரையிலான துறையின் முன்னுரிமைகள், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் படைப்புக்களை வலிமைப்படுத்தல் மற்றும் முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் ஆழமான ஊடுருவலைத் தூண்டுகின்ற அதேவேளை, உள்நாட்டுச் சந்தையில் அதன் சந்தை முன்னணி நிலையினைப் பேணுதல் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தது.

### வாடிக்கையாளர் மற்றும் சில்லறை வர்த்தகம்

நிதியாண்டின் இரு வேறுபட்ட அரையாண்டுகளை அனுபவித்த அதாவது, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர்களின் பலவீனமான கொள்வனவு சக்திப் பண்பினைக் கொண்ட முதலாவது அரையாண்டாக இருந்த அதேவேளை, இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல், இலங்கை ரூபாவின் பெறுமதி ஏற்றம் மற்றும் பொருளாதார நிலைமைகள் படிப்படியாக மீட்சியடைதல் எனபவற்றில் இருந்து நன்மையடைந்த இரண்டாவது காலாண்டை அனுபவித்த சிங்கர் (ஸ்ரீலங்கா) பீஎல்சி இத்துறையில் ஆதிக்கம் செலுத்துகின்றது. தெளிவான உயர் செலவு கையிருப்புகளுக்கு செயலூக்கம் மிக்க முயற்சிகளுடன் ஒன்றிணைந்து ஆண்டின் பிந்திய பகுதியை நோக்கி சந்தை நிலைமைகள் மேம்பட்டமை ரூபா 81.60 பில்லியனாக 28% வருமான வளர்ச்சியை ஈட்டுவதற்கு துறையினை இயலச் செய்தது. எவ்வாறாயினும், உயர்வான வரிச் செலவுகளுடன் ஒன்றிணைந்த ஒடுங்கிய இலாப எல்லைகள் துறையின் வரிக்கு முந்திய இலாபத்தில் ரூபா 611.29 மில்லியனாக 12% வீழ்ச்சியினை விளைவித்தது.

வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளை நிறைவு செய்வதற்கு, சிங்கர், அதன் உற்பத்தி மற்றும் வர்த்தக நாமப் படைப்புகளைத் தொடர்ந்து பரிணாம வளர்ச்சியடையச் செய்தது. 'Singer Premium Furniture" என்ற வர்த்தக நாமத்தையும் கம்பனி தொடங்கி வைத்தது. இதற்கான ஆரம்ப பதிலிறுத்தல், மிகவும் ஊக்கமளிப்பதாக இருந்து வருகின்றது. அதேவேளை, 'SLIM-KANTAR People's Awards 2024' நிகழ்வில் சிங்கர் ஆண்டுக்கான மக்களின் வர்த்தக நாமமாக மீண்டும் ஒரு தடவை அங்கீகரிக்கப்பட்டு, நாட்டின் வீட்டுத் துறை வர்த்தக நாமமாக அதன் அந்தஸ்தினை உறுதிப்படுத்தியது. ஆண்டு காலப்பகுதியில் செயன்முறைகளைச் சீரமைத்தல் மற்றும் வினைத்திறன்களை உருவாக்குதல் அத்துடன் சிங்கர் (ஸ்ரீலங்கா) பீஎல்சி சிங்கர் பினான்ஸ் தவிர அதன் துணை நிறுவனங்களை ஒரு சட்டரீதியான நிறுவனமாக ஒன்றிணைப்பதற்கும் நாடியது. அதற்கமைய ரெக்னிஸ் (லங்கா) பீஎல்சி, சிங்கர் இன்டஸ்ரீஸ் ஆகிய பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு, மூன்று ஏனைய பட்டியலிடப்படப்படாத துணைக் கம்பனிகளுடன் சேர்த்து தாய்க்கம்பனியுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

சிங்கர் பினாஸ் (லங்கா) பீஎல்சி சவால்மிக்க தொழிற்துறை நிலைமைகளுக்கு மத்தியில் ஒப்பீட்டளவில் தொடர்ந்தும் நன்கு செயலாற்றி வந்தது. ஆண்டின் போது இரண்டு கிளைகள் சேர்க்கப்பட்டு, மொத்த வலையமைப்பை 52 கிளைகளாக்கின. தொழிற்துறையைச் சேர்ந்த இதனையொத்த கம்பனிகளுடன் ஒப்பிடுகையில், இக்கம்பனி ஆரோக்கிய சொத்துப்பட்டியல் தரம், திரவத்தன்மை மற்றும் மூலதனமாக்கல் மட்டங்கள் என்பவற்றையும் பேணியது. ஆண்டின் போது ரூபா 652.40 மில்லின் கொண்ட வரிக்கு முந்திய இலாபத்தினை

# தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமானவரின் சிந்தனைக் குறிப்புகள்

ஈட்டி, துறையின் இலாபத்தன்மைக்கு முக்கிய பங்களிப்பாளர் ஒருவராக கம்பனி தோற்றம் பெற்றது. சந்தை நிலைமைகள் படிப்படியாக மேம்படுகின்றமையினால், துறை நம்பிக்கை அளிக்குமென எதிர்கால எதிர்பார்க்கையை நாம் நம்புகின்றோம். வாடிக்கையாளர் மையப்படுத்தலை உட்புகுத்துவதன் மீது சிங்கர் தொடர்ந்து உபாய ரீதியான வலியுறுத்தலை தொடர்ந்தும் இடம்பெறச் செய்து, உலகத்தரம் மிக்க வர்த்தக நாமமாக இருப்பதன் அபிலாஷையுடன் டிஜிட்டல் மயமாக்கத்தின் ஊடாக தயாரித்தல் மற்றும் வழங்கல் சங்கிலி உன்னதத்தினை வழங்குகின்றது. சட்டரீதியான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான பொருட்களுக்கிடையிலான அதிகரிக்கின்ற விலை ஏற்றத் தாழ்வு, கண்காணிக்கப்படாத சந்தையினை நோக்கி வாடிக்கையாளர்கள் நகர்வதற்கு ஊக்குவித்தல் ஒன்றாகச் செயற்படுவதனால், வாடிக்கையாளர் இலத்திரனியல் பொருட்களுக்கான கண்காணிக்கப்படாத சந்தையின் துரிதமான வளர்ச்சி, குறுகிய காலம் தொடக்கம் நடுத்தர காலம் வரை முக்கிய சவாலாகக் காணப்படுகின்றது, பெறுமதி சேர்க்கப்பட்ட வரி வீதத்தின் அதிகரிப்பு, கண்காணிக்கப்படாத சந்தைக்கு மேலும் தூ ண்டுதல்களை வழங்கியுள்ளன.

### ECO சொலூஷன்

ஆண்டின் போது துறையின் செயலாற்றம் நலிவடைந்து மோசமான பேரண்டப் பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகளைப் பிரதிபலித்தது. அளவுகளில் 28% வளர்ச்சிக்கு மத்தியில் சாதகமற்ற செலாவனி வீத இயக்கவாற்றல் காரணமாக, துறையின் வருவாய் ரூபா 13.85 பில்லியனாக 9% ஆல் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, தீவிரமான போட்டி விலைக்கு மத்தியில் தொழிற்பாட்டுச் செலவு உயர்வுகள் துறையின் இலாப எல்லைகளைச் சீர்குலைத்து, ஆண்டின் போது வரிக்கு முந்திய இலாபத்தில் 97% குறைந்து 68 மில்லியனாக விளைவித்தது. இச்சவால்களைத் தீர்ப்பதில், இத்துறை முகாமைத்துவ மற்றும் செயன்முறை வினைத்திறன்கள் மீது தொடர்ச்சியான கவனம் செலுத்தலை இடம்பெறச் செய்தது. வளர்ச்சியடைகின்ற ஊடகங்களில் பல்வேறு புதிய படைப்புக்களை தொடங்கி வைத்தல் மற்றும் மேல்நோக்கிய உள்ளார்ந்த ஆற்றலை எடுத்துரைக்கின்ற பெறுமதிசேர்க்கப்பட்ட பைபர் உற்பத்திப் பிரிவு என்பவற்றுடன், அதன் புத்தாக்கத்தில் இத்துறை கணிசமான முன்னேற்றத்தினை மேற்கொண்டது. நாட்டின் வீழ்ச்சியடைந்து வரும் தெங்கு உற்பத்தியினைக் கருத்திற் கொண்டு, மிகவும் தாக்குப் பிடிக்கத்தக்க வழங்கல் சங்கிலியைக் கட்டியெழுப்புவதற்கு மூலப்பொருள் மூலங்களை பன்முகப்படுத்துவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டன.

துறைக்கான நீண்டகால கேள்வி இயக்கவாற்றல்கள், குறிப்பாக, வளர்ச்சியடைகின்ற ஊடகம், மன்னரிப்புக் கட்டுப்பாடு மற்றும் மலர்ச் செய்கை போன்ற வகைகளில் சாதகமாகக் காணப்படுகின்றன. உற்பத்திப் பிரயோகங்கள் மற்றும் சந்தைப் பிரிவுகளில் தீவிரமான வளர்ச்சியை நாடுகின்ற அதேவேளை, புத்தாக்கம் மற்றும் உற்பத்தி உருவாக்கம் ஊடாக அதன் பெறுமதி சேர்க்கப்பட்ட சொத்துப்பட்டியலை மேம்படுத்துவதற்கு இத்துறை நாட்டம் கொள்ளும்.

### ஓய்வு

இத்துறையின் செயலாற்றமானது, வருவாய் ரூபா 9.02 பில்லியனாக 35% அதிகரிப்புடன் நாட்டின் சுற்றுலாத்துறை மீட்சியடைவதற்கு இசைவாக வலுப்படுத்தப்பட்டு சராசரி தங்கும் அளவுகளில் ஒட்டுமொத்த மேம்பாட்டினைப் பிரதிபலித்தது. கின்ஸ்பெரி மற்றும் ஶ்ரீலங்கன் அமாயா ஆதனங்களின் மையச் செயலாற்றத்தில் காணப்படும் மேம்பாடுகள், இழப்புகள் குறைவடைவதற்கு வழிவகுத்தன. எனினும், ஆண்டின் போது பழுதுபார்த்தல்களுக்காக பகுதியளவில் மூடப்பட்ட அமாயா குடாராவில் பலவீனமான செயலாற்றத்தின் மூலம் ஒட்டுமொத்த இலாபத்தன்மை தொடர்ந்தும் தடைப்படுத்தப்பட்டுள்ளன.

அண்மைய ஆண்டுகளில் துறையின் உபாயமானது, உற்பத்தி விநியோகத்தில் முதன்மை வகித்தல் ஊடாக அதன் போட்டி அனுகூலத்தை கூர்மையாக்குவதனை மையப்படுத்தியுள்ளது. இது, உயர்வான வாடிக்கையாளர் தரமிடலை இடையறாது பதிவு செய்வதற்கு ஆதனங்களை இயலச் செய்துள்ளது. அதிகரித்த உணவகத்தை நாடிச் செல்வதன் மூலம் சான்றளித்தவாறு நகரில் உணவகங்களுக்கான விரும்பப்படும் அமைவிடமாக கிங்ஸ்பெரி அதன் நிலையினை மீள உறுதிப்படுத்தியது. 2024 இல் இலங்கையின் சுற்றுலாத்துறை, சுற்றுலாப் பயணிகள் வருகையில் அதிகரிப்புக்குத் தயாராகவுள்ளதுடன், இம்மீட்சியில் இருந்து வெளிவரும் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு எமது ஆதனங்கள் தக்கவாறு நிலைநிறுத்தப்பட்டுள்ளன. கவனம் செலுத்தும் முக்கிய துறைகளாக கிங்ஸ்பெரியில் நிறுவனசார் மும்மொழிவினை மேம்படுத்துதல், சேவைக் கலாசாரத்தை வலுப்படுத்தல் மற்றும் அதிகரிக்கத்த தக்கவைத்தலை இயக்கும் பொருட்டு ஊழியர் பெறுமதி மும்மொழிவினை மேம்படுத்துதல் என்பன உள்ளடங்கியிருந்தன.

### ஏனையவை

Hayleys Business Solutions International மற்றும் ஹேலீஸ் பீஎல்சி யின் குழுமச் சேவைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற ஏனைய துறைகளானது, ஆண்டின் போது ரூபா 1.44 பில்லினாக வருவாயில் வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. வரிச் செலவுகள் 49% அதிகரிப்புடன் இது ஒன்றிணைந்து ஆண்டின் போது துறையின் வரிக்கு முந்திய இலாபத்தில் ரூபா 2.38 பில்லியனாக 16% ஆல் வீழ்ச்சியினை ஏற்படுத்தியது.

ஹேலீஸ் பிஸ்னஸ் இன்டநஷனல் சொலூஷன்ஸ், அவுஸ்திரேலியாவுக்கான அதிகரித்த ஊடுருவல் மற்றும் பரந்த சேவைகள் சொத்துப்பட்டியல் என்பவற்றிலிருந்து நன்மையடைந்து, வியாபார செயன்முறைப்படுத்தல் சேவை பெற்றுக்கொள்ளல் தொழிற்பாடுகளில் (BPO) வலுவான வளர்ச்சியினால் துணையளிக்கப்பட்ட, 13% கொண்ட சிறந்த தரத்திலான வளர்ச்சியினை வழங்கி, ஆண்டின் போது தாக்குப்பிடிக்கத்தக்கதாக விளங்கியது. எவ்வாறாயினும், இலங்கை ரூபாவின் பெறுமதியேற்றம் இலாபத்தன்மை மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. இது, வரிக்குப் பிந்திய கொத்தணியின் இலாபத்தில் ரூபா 301.88 மில்லியனில் இருந்து ரூபா 272.31 பில்லியனாக வீழ்ச்சியடைந்தது.

### பங்குடமையாளர் பெறுமதி

ரூபா 9.19 ஆக பங்கொன்றுக்கான உழைப்புகளில் வீழ்ச்சிக்கு மத்தியில் (முன்னைய ஆண்டில் ரூபா 21.80 இல் இருந்து) குழுமம் அதன் பங்குடமையாளர் கடமைப் பொறுப்புகளைத் தொடர்ந்தும் வழங்கி, 2024 மார்ச் மாதத்தில் ரூபா 5.35 கொண்ட இடைக்கால பங்குலாபத்தினை பிரகடனப்படுத்தியது. ஹேலிஸ் பங்கு விலை, 2023 ஏப்ரலில் ரூபா 72.50 இல் இருந்து ஆண்டின் முடிவில் ரூபா 82.10 ஆக அதிகரித்தது. இது, காலப்பகுதியில் 13% கொண்ட அதிகரிப்பாகும்.

### எதிர்பார்க்கைகளும் இலட்சியங்களும்

குறுகியகாலம் தொடக்கம் நடுத்தர காலமானது பாரிய எண்ணிக்கையிலான சமகால மற்றும் வரவிருக்கின்ற சவால்கள் மூலம் வடிவமைக்கப்படலாம் என்பதுடன், குறுகிய காலத்தில் இது நிச்சயமின்மையினை இயக்குகின்ற அதேவேளை, நம்பிக்கைக்கான சந்தர்ப்பத்தையும் இது இயலச் செய்கின்றது. உண்மை யாதெனில், எமது நிறுவனங்களின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை வலுப்படுத்துவதற்கு தனித்துவமான வாய்ப்புகள் அமைகின்ற உலகளாவிய இடர் நேர்வுகள் மற்றும் தலைமுறை சார்ந்த சவால்கள் என்பனவற்றுக்கு நீண்ட மற்றும் சமாந்தரமாக நிலைமைகள் அரிதாக மாற்றமடைகின்ற இயக்கவாற்றல் மிக்க. துரிதமாக பரிணாம வளர்ச்சியடைகின்ற உலகளாவிய சந்தைகள் போன்ற வியாபாரங்கள் என்பனவாகும்.

2024 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.2% ஆல் விரிவடைவதுடன் இணைந்து, உலகளாவிய வளர்ச்சி அதேவேகத்தில் தொடருமென சர்வதேச நாணய நிதியம் மதிப்பிடுகின்றது. பல கோணங்களைக் கொண்ட சவால்கள் மற்றும் பல பொருளாதாரங்கள் மூலமும், நாணய மற்றும் அரசிறை இறுக்கமாக்கல் என்பனவற்றுக்கு மத்தியில் உலகளாவிய பொருளாதார நடவடிக்கை வியக்கத்தக்க அளவில் தாக்குப்பிடிக்கத்தக்கதாக இருந்து வருகின்றது. புவிசார் அரசியல் பதற்றங்களின் உள்ளார்ந்தங்கள் மற்றும் விடாப்பிடியான பணவீக்கம் என்பவற்றை கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் உள்ளடக்குகின்ற அதேவேளை, நடுத்தர காலத்தில் உலகளாவிய பொருளாதாரம் மென்மையான இடம்பெறுதலை அணுகுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டு பக்கத்தில் இலங்கையின் பொருளாதாரமானது, சுற்றுலாத்துறை புத்துயிர் பெறுதல். வலுவான வெளிநாட்டு பணம் அனுப்பல் பாய்ச்சல்கள் அத்துடன், அரசிறை மற்றும் வெளிநாட்டு நிலுவைகளில் மேம்பாடுகள் என்பன மூலம் துணையளிக்கப்பட்டு 2024 இல் தொடர்ந்து நிலைநிறுத்தப்படுமென நாம் சாதகமான எண்ணப்பாங்குடன் காணப்படுகின்றோம். எது எவ்வாறிருப்பினும், வரவிருக்கும் தேசிய தேர்தல்களின் பெறுபேறுகள், வலுவான மற்றும் நம்பகமான கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் என்பன நீண்டகால பொருளாதார தாக்குப்பிடிக்கும் தன்மைக்கும், உறுதிப்பாட்டிற்கும் இன்றியமையாததாகும். வளர்ச்சிக்கு இன்றியமையாத முன்தேவைப்பாடு ஒன்றாக விளங்குகின்ற தனியார் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கு இது அத்தியாவசியமானது என நாம் உறுதியாக நம்புகின்றோம். மேலும், இறுதியான செலாவணி வீதம் மற்றும் ஆக்கபூர்வமான வரிக்கொள்கைகள் என்பன, ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட வியாபார வளர்ச்சியினை இயக்குவதிலும், முதலீடுகளைத் தூண்டுவதிலும் மிக முக்கியமானவையாக விளங்குகிறன. அயல்நாடுகளின் இணைத் தரப்பினர்களுடன் செயல்திறன் வாய்ந்த விதத்தில் போட்டியிடுவதற்கும், அதனூடாக, நாட்டிற்கு மிகவும் தேவையான வெளிநாட்டுச் செலாவனியை ஈட்டுவதற்கும், ஏற்றுமதியாளர்களை இயலச் செய்கின்ற வரிக் கொள்கைகளைத் தாபிப்பதன் ஊடாக, ஏற்றுமதியாளர்களுக்கென ஆக்கபூர்வமான தொழிற்பாட்டு தோற்ற அமைப்பு ஒன்றினைத் தாபிப்பதன் இன்றியமையாத முக்கியத்துவத்தை நாம் மேலும் வலியுறுத்துகின்றோம்.

எமது கவனத்தை வேண்டுகின்ற முக்கியமான தெரிவுகளையும், வாய்ப்புகளையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்ற அதேவேளை, செயற்படாமையின் விளைவுகள் ஒருபோதுமில்லாதவாறு மிகவும் தீவிரமாகக் காணப்படுகின்றன. சாவல்களில் சிக்கல்வாய்ந்த தன்மையானது, அவை தீர்க்க முடியாது என அர்த்தப்படுவதில்லை என்பதுடன், எபபோதும் போன்று குறிப்பாக விரைவான மாற்றங்களைக் கொண்ட காலங்களில் தாக்குப்பிடிக்கும் தன்மை மற்றும் ஏற்றதாக மாறிக்கொள்ளும் தலைமைத்துவம் மற்றும் சிறந்த பெறுபேறுகள் என்பவற்றுக்கு சாதகமான எண்ணப்பாங்கு மிகவும் முக்கியமானது என்ற எனது நம்பிக்கையினை வலியுறுத்துகின்றேன். குழுமத்தின் இணையற்ற மனித மூலதனம், உற்பத்தி இயலளவுகள், வர்த்தக நாமங்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட சந்தைகளில் ஆழமாக ஊடுருவுவதை தூ ண்டுவதற்கான உறவுகள் என்பவற்றிலிருந்து நாம் தொடர்ந்தும் அனுகூலம் அடைந்துள்ளோம். போட்டி அனுகூலம் ஒன்றினைத் தூண்டுவதற்கான உபாயரீதாக உட்பொதிந்த சுற்றாடல், சமூக மற்றும் ஆளுகை, புதிய சந்தைகளுக்கான பெறுவழி மற்றும் மூலவளங்களை உகப்பாகப் பயன்படுத்துகின்ற அதேவேளை, சமூகம் என்ற வகையில், நாம் எதிர்கொள்கின்ற முக்கிய சமூக மற்றும் சூழல் பிரச்சினைகளை செயல்திறன் வாய்ந்த விதத்தில் தீர்ப்பதில் அடுத்த நிதியாண்டில் எமது முக்கிய முன்னுரிமையாக அமைந்திருக்கும்

## பாராட்டுதல்கள்

கடந்த ஆண்டில் நாம் எடுத்துக்காட்டியதைப் போன்று ஓர் அணியாக ஒன்றிணைந்து நாம் மேற்கொண்ட முக்கியமான பயணம் மற்றும் நாம் ஒன்றிணைந்து கட்டியெழுப்புகின்ற வியக்கத்தகு எதிர்காலம் மூலம் நான் மனம்கவரப்பட்டுள்ளேன். சபை சார்பில் அவர்களது உணர்வு மற்றும் அவர்களது செயலாற்றும் விதம், தாக்குப்பிடிக்கும் தன்மைக்காக ஒவ்வொரு மற்றும் அனைத்து ஹேலிஸ் குடும்ப உறுப்பினர்களுக்கும் எனது இதயபூர்வமான பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சவால்மிக்க தோற்ற அமைப்பு ஒன்றின் ஊடாக குழுமத்தை வழிநடத்துவதில் அவர்களது தனித்துவமான தலைமைத்துவத்திற்காக சபைகளின் எனது சக உறுப்பினர்களுக்கும், குழுமத்தின் முகாமைத்துவக் குழுவின் உறுப்பினர்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன். இப்பயணத்தில் என்னுடன் பங்குடமை வகித்த எனது பங்குடமையாளர்கள், வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் வியாபாரப் பங்காளர்கள் ஆகியோரின் நம்பிக்கையினையும் நம்பகத் தன்மையினையும் பாராட்டுகின்றேன்.



**மொஹான் பண்டிதகே**
தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி

2024 மே 17ஆம் திகதி